www.tamilarangam.net

நட்புறவு

# பாலம்

இலக்கிய இதழ்




வின்சென்ட் வான்கோ
(1853–1890)

நினைவு நூற்றாண்டு

ஜூலை 1990 விலை ரூ.3

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வான்கோ

www.tamilarangam.net


# பாலம்

இலக்கிய மாத இதழ்
ஜூலை 1990

29

ஆசிரியர் :
இரா. திரவியம்

ஆசிரியர் குழு :
சமந்தா
இளம்பிறை
குமார்

தனியிதழ் ரூ. 3 00
ஆண்டுச் சந்தா ரூ. 30.00
அரையாண்டுச்சந்தா ரூ.15.00

தொடர்பு முகவரி :
பாலம்
25, அருணாசலபுரம்
மெயின் ரோடு
அடையாறு சென்னை-20

நிர்வாக ஆசிரியர் :
அதியமான்


## மீண்டும் ஜூலை

ஜூலை வரும் பின்னே—இனப்
படுகொலை வரும் முன்னே

என்பது ஈழத் தமிழர்கள் வாழ்வில் 'பருவம்' போல் வரக்கூடிய ஒரு நிகழ்வாகி விட்டது. மீண்டும் மீண்டும் கண்ணீரும், இரத்தமுமே வாழ்க்கையாகிப் போன தமிழர்களது வாழ்நிலை குறித்து நாம் மிக்க மன வேதனை அடைகின்றோம்.

சுமார் 31 மாத 'ஈழப் பயணத்தை' முடித்துக் கொண்டு இந்திய அமைதி காக்கும் படை மார்ச் கடைசி வாரத்தில் இந்தியாவிற்கு வந்தது. அது முதல் அமைதிப் படை மையங் கொண்டிருந்த இடங்களில் தளம் அமைக்க சிங்கள இராணுவம் முயன்ற நேரங்களில் எல்லாம் தமிழ்ப் பேசும் மக்கள் பலத்த கண்டனத்தைத் தெரிவித்து தடுத்து வந்தனர். சிங்கள இராணுவம் தற்போது முழுப் பலத்துடன், ஆவேசமாக தமிழ்ப் பகுதியில் ஒரு முழுமையான போரை நடத்திக் கொண்டு இருக்கிறது.

ஜூன் 11 முதல், போர் நிறுத்தம் மீறப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிங்கள இராணுவத்திற்கும் இடையே கடுமையான போர் நடைபெற்று வருகிறது. வாழ்வா சாவா என்ற நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளும், தங்களுடைய மானப் பிரச்சனையாக- கௌரவப் பிரச்சனையாக சிங்கள ஆட்சியாளர்களும் இப்போரைக் கருதுகின்றனர் என்பதை அவதானிக்க இயலுகிறது. சுமார் 25 நாட்களாக நடைபெற்று வரும் இப்போரினால் 4 இலட்சம் தமிழ்ப் பேசும் மக்கள் அகதிகளாக, ஆக்கப்பட்டுள்ளனர். மதிப்பிடமுடியாத அளவிற்கு பொருட்சேதமும் ஏற்பட்டுள்ளன; சுமார் 3000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஈழமக்கள் இராணுவ ஒடுக்குமுறைக்கு உள்ளான நேரங்களில் எல்லாம் தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த தமிழ்நாடு மக்கள் இன்று 'அமைதி' காக்கின்றனர். கடந்த காலங்களில் ஈழப் போராளி இயக்கங்கள் தமிழ்நாட்டில் மேற்கொண்ட ''ஆயுத ரீதியிலான வன்செயல்களை, தமிழ் நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை'' என்பதன் வெளிப்பாடு தான், தற்போதைய தமிழக மக்களின் 'அமைதி' என்பதைப் போராளிகள் உணரவேண்டும். மேலும் ஈழப் போராட்டத்திற்கு எதிரான சக்திகளின் பிரச்சாரத்துக்கு இம்மாதிரியான செயற்பாடுகள் தீனியாவதால், ஈழப் போராட்டமே கொச்சைப்படுத்தப்படுகிறது என்பதையும் சம்பந்தப்பட்டோர் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

விமானத் தாக்குதல், தேடுதல் வேட்டை என்ற சூழலில் இருந்து வட கிழக்குப் பகுதிகள் மீள, மீண்டும் போர் நிறுத்தம் தேவை. திரு பிரேமதாசா நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை மூலம் புலிகளுடன் கடந்த காலங்களில் இணக்கம் கண்டார் என்பதையும் இங்குகுறிப்பிட விரும்புகிறோம். இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி விட்டு (போர் நிறுத்தத்தை அறிவித்து) தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதைத்தான் சனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டோர் எதிர்பார்க்கின்றனர். □

www.tamilarangam.net

என்றும் இல்லாதது போல் சூரியன் பூமியை சுட்டு பொசிக்கிக் கொண்டிருந்தது. எழுந்து பாயை சுருட்டிப் போட்டு விட்டு தோட்டத்து கேணிக்கு முகம் கழுவப் போனேன். அம்மா இன்னும் எழுந்திருக்கவில்லை. தோட்டத்துப் படியில் படுத்திருந்தது.

கிணற்றில் கிடந்த வாளியை எடுத்து தண்ணீர் இழுத்தால் வாளி வராது. கயிறுதான் வரும். அந்த அளவுக்கு ''பஞ்சல்'' அரை வாளி இழுத்து மூஞ்சியை கழுவுவதற்குள் போதும் போதும் என்று ஆகிவிட்டது. வழக்கம் போல் காலை பேச்சு. குளியல் எல்லாம் முடித்து வீடு திருப்ப மணி எப்படியும் நண்பகல் பதினொன்று ஆகிவிடும்.

காலையில் சாப்பிட என்னவென்று தட்டில் வந்தபிறகு தான் தெரியும். இன்று இட்டிலி. வாய்க்கு ருசியாய் சட்டினி, சாம்பார் தொவயல் என்று இரண்டு மூன்று அயிட்டங்கள். எல்லோரும் வேலை இல்லாதவன்மீது காட்டும் மரியாதையைதானே தங்கச்சியும் காட்டுவாள்? அதனால் இதற்கு எல்லாம் பணம் ஏது என்று கேட்க நினைத்தும் கேட்கவில்லை. இன்று மதியம் அரிசி சோறும் பொறியலும் என்றும் இல்லாதது போல் சற்று அதிகமான சாப்பாடு தான்.

அப்பா இரண்டு நாளைக்கு முந்திதான் செலவுக்கு பணமில்லை என சோத்துக்கு கடன் வாங்க அலைந்து கொண்டிருந்தார். ஆனால் இன்று ஆப்பிள், ஆரஞ், வாழைப் பழம் இதுக்கெல்லாம் ஏது வழியென்று தெரியவில்லை. ஊரில் இருந்து யாரும் விருந்தாளிகள் வரவும் இல்லை.

மதியம் சாப்பிட வரும் போதும் அம்மா படுக்கையில் இருந்து எழுந்திருக்கவில்லை. இரவு சாப்பிட்டு படுக்கும் போது இத்தனை காலத்தில் ஒருநாள் கூட உடம்புக்கு முடியலே என்று அம்மா படுத்து நான் பார்த்ததில்லை. எப்போதும் வேலை வேலை என்று அலைந்து பறந்து கொண்டேயிருக்கும். இன்று உடம்புக்கு முடியலே என்று அம்மா படுத்து இருக்கும் போது மனக் கஷ்டத்தோடு தூங்கிப் போனேன்.

வீடு சில நாட்களாக சாப்பாட்டுக் கஷ்டம் இல்லாமல் நகர்ந்து போனது. இப்போதெல்லாம் யாரும் வீட்டில் ஒருவரோடு ஒருவர் சண்டைப் போட்டுக் கொள்வதில்லை.

அக்காள் மகள் சுகு வயசுக்கு வந்துவிட்டதாக ஊரில் இருந்து சேதி சொல்ல ஆள் வந்தது. அம்மா உடனே அப்பாவைக கூப்பிட

**வடிவேல் இராஜதுரை**

ஆள் அனுப்பியது. கிழக்கே டீக்கடையிலிருந்த அவரை கூட்டி வந்த உடன் அம்மாவுக்கு, அப்பாவுக்கு, தங்கச்சிக்கு, தம்பிகளுக்கு எல்லாம் ரொம்ப சந்தோஷம்; சற்று நேரம் தான்.

அப்பாவுக்கு முகம் வாடிப் போய்விட்டது. வந்த ஆளுக்கு சாப்பிட சாப்பாடு இருக்கா என்று கேட்டு, இல்லை என்றவுடன், வந்தவருக்கு பக்கத்து வீட்டு வாத்தியார் அண்ணனிடம் ஐந்து ரூபாய் வழக்கம்போல் கடன் வாங்கி கொடுத்துஅனுப்பி விட்டார்.

அம்மாவுக்கு அவசரம். தெருவில் போவோர் வருவோர் எல்லோரிடமும், ''மாமன் வந்துதான் தண்ணி ஊத்தனும்னு உக்கார்ந்திருக்குங்க... போனவர இன்னும் காணோம்'' என்று சொல்லி பேத்தி வயசுக்கு வந்த செய்தியை ஊர் பூரா தெரிய சொல்லிக் கொண்டிருந்தது.

அப்பா வரும் போது நாடார் கடையில் கடனில் ஒரு 'பவுடர்டின், சோப்பு, சீப்பு, கண்ணாடி எல்லாம் வாங்கி வந்துவிட்டார். வீட்டில் தங்கச்சி கட்டாமல் வைத்திருந்த தாவணி,பாவாடைஎன்று எடுத்துக் கொடுத்து அம்மாவையும், தம்பிகளையும் ஒரு வழியாக அனுப்பி வைத்து விட்டார் அப்பா.

இதற்கு பிறகு வீட்டுக்கு அழைக்கும் நிகழ்ச்சிக்கான வேலைகள் நடக்கவும், பேசவும், ஆரம்பித்தன. இன்னும் எட்டு நாள் தான் இருக்கிறது. நல்ல சேலை துணிமணிக்கே

# மனச்சுமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஐந்நூறு ரூபாய் வேணும், மத்த சில்லரைச் செலவுகள் என்று ஒரு இருநூறு முன்னூறு எப்படியும் எட்டு நூறு தேவை. அப்பாவுக்கு கஷ்டதுக்கு மேல் கஷ்டம். என்னால் என்ன செய்ய முடியும்? அதனால் என்னை யாரும் கண்டு கொள்ளவில்லை.

நேற்றுதான் அப்பா ஊருக்குப் போய் சுகுணாவிற்கு சேலை துணிமணி எல்லாம் எடுத்து வந்தார்; அம்மா சொல்லிக் கொண்டிருந்தது.

இன்று எப்போதும் போல் வீட்டுக்கு பதினோரு மணிக்குதான் போனேன், இன்றும் அப்பா படுக்கையில் ரேழியில் படுத்திருந்தார்.

என்ன அவருக்கு என்று நான் கேட்கவும் மில்லை. சாப்பிட்டுவிட்டு வெளியில் வரும் போது 'அம்மா' கூப்பிட்டு மாட்டுக்கு 'வைய்க் கல்' போரடியிலிருந்து கட்டிக்கிட்டு வா என்றது. நான் திரும்பிக் கூட பார்க்காமல் ''எல்லாம் அப்பா கட்டிக்கிட்டு வருவார்'' என்று நகர்ந்தேன். ஏண்டா அவருக்கு உடம்பு சரியில்லைன்னுதானே சொல்லுகிறேன். நீப்பாட்டுக்கு போனா என்ன அர்த்தம்.வெளியில் வரும்போது ''ரேழியில்'' அப்பா இன்னமும் படுத்திருந்தார். அவருக்கும் வயது ஆகிவிட்டது. எத்தனை காலம்தான் மனுஷன் உழைப்பை சுமப்பது? சரி என்று கையில் கயிறுடன் வையக்கல் கட்ட போனேன் போரடிக்கு.

''மடத்து திண்ணையில்'' இரண்டு மூன்று பேர் பேசிக் கொண்டது, என் காதில் விழ வேண்டும் மென்றே பேசுவதாக எனக்குப் பட்டது. அவன் என்னய்யாபன்னுவான்.பத்து வருடமாக மழையுமில்லை, விளைச்சலு மில்லை. போதும் போததற்கு சொந்தகாரங்க தேவை வேற. சோத்துக்கு மனுஷன் பாப்பானா? தேவைக்குப் பாப்பானா... போதாக் குறைக்கு பேத்தி வேற வயசுக்கு வந்துட்டா. அதான் நேற்று அரியலூர் போயிட்டு வந்துட்டானாம் என்று அப்பாவின் பெயரைச் அடைமொழியோடு சொன்னதைக் கேட்டு எனக்கு சுறுக்கென்றது.

வைய்க்கலைக் கொண்டுவந்து கொட்டகையில் போட்டு விட்டு நண்பர்களிடம் சொல்லி விட்டு அந்த முடிவை அப்பாவிடம் சொல்லி புறப்பட்டுவிட வேண்டியதுதான்.

''ஏன்டா நீ ஏன் வேலை செய்யலேன்னு நான் ஏதாச்சும் கேட்டு இருப்பேனா. இல்ல உம்மாதான் கேட்டிருப்பாளா. மயிறு வேலை வந்தாதான் வருது. இல்லாட்டிப் போகுது. நாலு மழை நல்லா பேஞ்சா நாம போடலாம் நாலு குடும்பத்துக்கு சோறு'' என்று சொன்னவர் கண்ணிலிருந்து நீர் முட்டிக் கொண்டு வந்தது. அப்பா அழுது நான் பார்த்ததில்லை. இன்று அழுதுவிடுவாரோ என்று எனக்கு பயமாகயிருந்தது. நல்ல வேலை அப்படி எதுவும் நடக்கவில்லை. அதற்குள் அம்மா, தம்பி, தங்கச்சியெல்லாம் பக்கத்தில் வந்து விட்டார்கள்.

நான் வீட்டின் உள்ளே சென்று இருந்த வேட்டி சட்டையை மடித்து ஒரு துணிப் பையில் வைத்துக் கொண்டு தெருவுக்கு வந்து விட்டேன்.

ஊர் முனையில் இருக்கும் மாரியம்மன் கோவில் கலசத்தில் மஞ்சள் வெயில் பட்டு ஜொலித்துக் கொண்டிருந்தது, □

---

ஒளி தரும்
எரிகிற அனைத்தும்.

ஒன்றினை—
அழித்தாலும்
அழிக்காவிட்டாலும்.

●

நிரந்தரமானது
ஏதுமில்லை.

எல்லாவற்றிற்கும்
நேற்று, இன்று, நாளை

●

நாம்
வாழ்கிறோம்.

போய்க் கொண்டிருக்கிறது
காற்று.

●

சிற்பங்கள்
அற்புதம்

கோவிலுக்குள்
இல்லா நிலையில்

●

கு. விடுதலை விரும்பி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தோழர் ஹோ சி மின்
# நினைவு கூரப்பட வேண்டிய
# புரட்சியாளர்

ஹோசிமின் நம்மால் நினைவு கூரப்பட வேண்டிய ஒரு புரட்சிக் கலைஞர். கம்யூனிஸ்டு களுக்கு கலை இலக்கியமெல்லாம் வராது; அவர்கள் கலைக்கு விரோதிகள் என்ற ஓர் அருவெறுப்பான சாயத்தைக் கம்யூனிஸ்டுகள் மீதுமுதலாளித்துவ விமர்சகர்கள் காலம்கால மாக பூசமுயற்சித்துக் கொண்டு வருகின்றனர். அத்தகைய அவதூறுகளையெல்லாம் உடைத் தெறிந்து கிளம்பிய கம்யூனிஸ்டு இலக்கிய வாதிகளில் ஹோசிமின் குறிப்பிடத் தகுந் தவர். ஆங்கிலம், பிரெஞ்சு, வியத்நாம், சீனம், ரசியன் ஆகிய மொழிகளில் கற்றுத் துறை போகிய ஹோசிமின் எழுதியுள்ள கவிதைகள், கதைகள், கட்டுரைகள், குறு நாடகங்கள் ஆகியவை மனித சமூகத்துக்குத் தேவையான புரட்சிகர மதிப்புகளைத் தாங்கி நிற்கின்றன. எல்லாப் படைப்புகளிலும் ஹோசிமின் என்ற புரட்சிகர அரசியல்வாதியைக் காணலாம்.

1890 இல் பிறந்த ஹோசிமின் 1911 இல் தன் தாய் நாட்டை விட்டு பிரெஞ்சுக் கப்பலில் வெளியேறும் பொழுது அவரது நாடு -இந்தோ சீனத்தின் ஒருபகுதியான வியத்நாம்- பிரெஞ்சு நாட்டின் குடியேற்றப் பகுதியாக இருந்தது. உலகின் பல பகுதிகளுக்குச் சென்று பிரெஞ்சு தேசத்தில் குடியேறி பிரெஞ்சு சோசலிசக் கட்சியில் சேர்ந்து பிரெஞ்சுப் பொதுவுடைமைக் கட்சியை நிறுவி, அதன் மூலம் மூன்றாம் பொதுவுடைமை அகிலத் துடன் இணைந்து பணிபுரிந்து இந்தோ சீனப் பொதுவுடைமைக் கட்சியை நிறுவி, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போரைத் தொடர்ந்து நடத்தி, பிரெஞ்சுஏகாதிபத்தியத் தையும் அதற்கு அடுத்து உடனடியாக ஆக்கிர மித்த ஜப்பான் ஏகாதிபத்தியத்தையும் விரட்டி அடித்து வியத்நாமின் ஒரு பகுதியை விடுவித் தார். வியத்நாமின தென்பகுதியை ஒரு பொம்மை அரசாங்கத்தின் கீழ் அமெரிக்க ஏகாதிபத்தியம் அடிமைப்படுத்தியது. தம் வாழ்நாளின் இறுதிவரை ஒன்றுபட்ட வியத் நாமை அடைந்தே தீருவோம் என்ற முழக் கத்தின் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரை ஹோசிமின் தொடர்ந்தார். அவரது இறப்புக்குப் (1969) பின் ஆறு ஆண்டுகள் கழித்து அமெரிக்க ஏகாதிபத்தியம் வியத்நாமிய மக்களால் அடித்து விரட்டப்பட்டது. ஹோ சிமின் வாழ்க்கை முழுவதும் விடுதலைக்கான தாகம் — போராட்டம் இடையறாது பிணைந் திருப்பதைப் போலவே அவரது இலக்கியப் படைப்பு முழுவதிலும் இத் தாகத்தையும் போராட்டத்தையும் காணலாம். இதையே ஹோசிமின் செய்தி (message) என்று கூடக் கூறலாம். **விடுதலையையும் சுதந்திரத்தையும் விட விலை மதிக்க முடியாதவை உலகில் வேறெ துவும் இல்லை** என்ற வாசகமே அவரது செய்தியை உணர்த்துகிறது.

1942 இல் சீன கொமின்டாங் வலது சாரிப் பிரிவின் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு 30 சிறைகளில் 395 நாட்களைக் கழித்த பொழுது ஹோசிமின்னால் சீன மொழியில் எழுதப்பட்ட கவிதைகள் 1960 இல் வெளியுலகுக்கு அறிமுகமாயின. **சிறைக் குறிப்புகள்** என்ற பெயரில் Prison Diaries பரவலாக அறிமுகமான இக் கவிதைத் தொகுப்பில் விடுதலை ஆர்வத்தைப் பரக்கக் காணலாம்.

கை கால்களில் பூட்டப்பட்ட விலங்கு களுடன் ஒரு சிறையிலிருந்து இன்னொரு சிறைக்குக் கால் நடையாக ஹோசிமின்னை அழைத்துச் செல்வது வழக்கம். கொமின்டாங் வீரர்கள் உணவுக்குப் பயன்படும் பன்றியை அவர்களின் தோள்களின் மீது தூக்கி முன் செல்ல, சங்கிலியால் பூட்டப்பட்டு அங்கு மிங்கும் அலைக்கழிக்கபட்டு இழுத்துச் செல்லப் படும் தம் நிலையை ஹோசிமின் கவிதையாக்குகின்றார்.

எமது
பாதுகாவலர் தோள்பீடங்களில்
பன்றிகள் அமர்ந்துள்ளன.

நானோ
கொடூரமாக இழுத்துச் செல்லப்
படுகிறேன்.

மனிதன் சுதந்திரத்தை
ஒரு தடவை

**கோ. கேசவன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இழந்தால்
பன்றியினும் கீழானவனே.

சுதந்திரத்தை இழப்பதே
எல்லாவற்றிலும் மோசமானதாகும்
சுதந்திரத்தை இழந்தவனுக்கு
பேச்சு மட்டுமல்ல
அங்க அசைவு சுதந்திரமும் இல்லை.

என்னை
ஒரு குதிரையைப் போலவும்
எருமை மாட்டைப் போலவும்
இழுத்துச் செல்கிறார்கள்...

ஒரு பன்றிக்குக் கொடுக்கிற 'மரியாதை' கூட, சுதந்திரமற்ற மனிதனுக்குக் கிடையா தென்பதைக் குறிப்பிடும் தோழரின் இக் கவிதையில், சுதந்திரமற்ற மனிதன் கட்டி இழுக்கப்பட்ட எருமையைப் போன்றவன் என்று குறிப்பிடும் உவமை நமது புறநானூற்றுக் கவிதையை நினைவு கூர்கின்றது. போரில் தோற்று சிறையில் அடைக்கப்பட்ட ஒரு மன்னன் சிறைக் காவலனிடம் தண்ணீர் கேட்டு, காலதாமதமாகத் தரப்படும் நிலையில் தன் சுதந்திரமற்ற தன்மைக்கு,

"தொடர்ப்படும் ஞமலியின் இடர்ப்படுத்தி இரீஇய" என்று உவமிக்கின்றான்.

சங்கிலியால் பிணைக்கப்பட்ட ஒரு நாய் இங்கும் அங்கும் அலைக்கழிக்கப்பட்டு வாடுவதைப் போல தன்நிலை இருப்பதாக உவமிப்பது இங்கு நினைவு கூரத்தக்கது. அடிமை நிலையின் சோக வெளிப்பாடு, புறநானூற்றுக் காலமாக இருப்பினும் இருபதாம் நூற்றாண்டாக இருப்பினும் இலக்கியங்களில் பதிவு செய்யப் படுதலைக் காணலாம்.

கை கால்கள் கட்டப்பட்டு எருமை மாட்டைப் போல இழுத்துச் செல்லப் படும் நிலையிலும்கூட, விடுதலையை நேசிக்கும் கவிஞனின் மனதுக்குக் கடிவாளம் இட முடியுமா?

எனது
கரங்களும் கால்களும் கட்டப்பட்டுள்ளன.
குன்றுகளில்
பறவைகள் பாடிக்கொண்டிருக்கின்றன.

மலர்கள் மணம் வீசிக் கொண்டிருக்
கின்றன.

பறவைகளின் இனிய பாடலைக்
கேட்டும்
மலர்களின் நறுமணத்தை
நுகர்ந்தும்
மகிழ்வதை யாரால் தடுக்க இயலும்?

இந்தக் கவிதை நமக்கு ஆந்திராவின் புரட்சிக் கவிஞரான தோழர் வரவரராவ் சிறையிலிருந்து எழுதிய ஒரு கவிதையின் பகுதியை நினைவூட்டுகிறது.

இந்தச் சிறைசாலை
எனது நாக்கிற்குத் தடை விதிக்கிறது
ஆனால்
சூரியனின் சுடரை யாரால் தடுக்க
முடியும்?

விடுதலையை நேசிக்கும் புரட்சிகரப் பொதுவுடைமையாளர்கள் ஆந்திரச் சிறையில் இருப்பினும் சீனச் சிறையில் இருப்பினும் உணர்வுகளின் ஒருமை நிலையில் இணைவதை நாம் கவனிக்க இயலும். இந்த விடுதலைத் தாகமே துயரப்பட்ட மனிதர்களின் மீதான நேசத்தை உண்டுபண்ணுகிறது. சிறையிலடைக்கப்பட்ட ஒரு காதலனைக் காண வந்த காதலியின் நிலையை ஹோசிமின் வர்ணிக்கிறார்.

சிறைக் கம்பிகளுக்கு
இந்தப் பக்கத்தில் கணவன்
அந்தப் பக்கத்தில் மனைவி.

நெருக்கமாக நிற்கும் இருவருக்குமிடையில்
இடைவெளியோ சில அங்குலமே...

இருப்பினும்
இருவருக்குமிடையிலான இடைவெளி
வானத்துக்கும் பூமிக்கும் இடையிலான
தாகும்.

(26.5.1990 அன்று சிவகங்கை சமூக ஆய்வு மன்றத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய உரையைச் சற்று விரிவுபடுத்தி எழுதப்பட்ட கட்டுரை.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உணர்வுகளின் பரிமாற்றத்தில்
சொற்கள் தோல்வியடைகின்றன
கண்கள் அதற்கு முயல்கின்றன.

உச்சரிக்கப்படும் ஒரு சொல்
ஓராயிரம் கண்ணீர்த் துளிகளுடன்
கலக்கின்றது
இத்துயரம் இதயத்தைப்
பிழிகின்றது...

சோகம் ததும்பும் இந்த மனித நேயக் கவிதை, உலக இலக்கியத்தில் ஹோசிமின்னுக்கு உரிய இடத்தைத் தருகிறது.

ஓர் அரசியல் போராளியான ஹோசிமின் கவிஞனின் பணியை உயர் மட்டத்துக்கும் உயர்த்திக் காண்பிக்கிறார்.

கவிஞனின் பணி
கவிதை மட்டுமா...?
ஒரு போராட்டத்தைத் தலைமை ஏற்று
நடத்தவும் வேண்டும்...

ஹோசிமின் விடுக்கும் இந்த அறைகூவல் புதியதன்று. எனினும் இது நமக்குப் பல கவிஞர்களை நினைவுக்குக் கொண்டு வருகிறது. குறிப்பாக ஆந்திராவின் சிரிகாகுளம் மாவட்டத்தில் 1968இல் நடைபெற்ற புரட்சிப் போராட்டங்களில் மார்க்சிய லெனினியப் பொதுவுடைமைக் கட்சித் தலைமையின் கீழ் பணிபுரிந்து 300 கிராமங்களில் மக்கள் அதிகாரத்தை நிறுவிய எண்ணற்ற தோழர்களுள் ஒருவரும் சோனபட் பகுதியின் மார்க்சிய லெனினியக் கட்சியின் செயலருமான கவிஞர் சுப்பராவ் பாணிக் கிரஹியை நாம் இங்கு நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். கவிஞனாக மட்டுமின்றி போராட்டத்துக்குத் தலைமையேற்ற 35 வயதான பாணிக்கிரஹி 1969இல் சித்திரவதைக்குள்ளாகிக் கொல்லப்பட்டார். ஹோசிமின் கவிதை நமக்கு இதை நினைவூட்டுகிறது.

ஹோசிமின் ஒரு போராளிக்குத் தேவையான உறுதியை கவிதைளில் வடித்துள்ளார்.

விடாமுயற்சி
அனைத்தையும் சாதித்தே தீரும்.

உறுதிப்பாடு இருப்பின்
மலையைப் பெயர்த்து கடலை நிரப்ப
முடியும்.

இப்படிப்பட்ட போராளிகளைப் பெற்றிருக்கின்ற ஒரு சமூகம் விடுதலையைப் பெறாமல் இருக்க இயலாது.

சூரியன் உதயமாவதை
யாராலும்
தடுக்க முடியாது.

இத்தகைய கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது ஹோசிமின் இலக்கியங்களில், அடக்கப்பட்ட சமூகத்தின் விடுதலைத் தாகத்தையும் போர்க்குணத்தையும் காண்கிறோம். இதனால்தான் ஹோசிமின் இலக்கியங்கள் எந்த மொழியில் எழுதப்பட்டிருப்பினும் அவை நமது சொந்த சோகங்களையும் உணர்வுகளையும் சுமந்து வருகின்றவையாக இருக்கின்றன. வியத்நாமிய இலக்கியவுலகுக்கு மட்டுமின்றி அடிமைப்பட்ட நாடுகளுக்கான விடுதலை இலக்கியத்துக்கு ஹோசிமின் பங்களிப்பு மகத்தானது. நம்மால் தலைவணங்கி மதிக்கத் தக்கது.

ஹோசிமின் நமக்கு இலக்கியத்தை மட்டும் கற்றுத் தரவில்லை; அரசியலையும் போதித்துள்ளார். இன்றைக்கு உலக நாடுகள் முழுவதும் உள்ள முதலாளிய சக்திகள் குதூகலித்துக் கொண்டிருக்கின்றன. ரசியா, சீனம், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் மாற்றங்கள் சோசலிசக் கருத்தியல் குறித்த பிரச்சனைகளை நம்முன் நிறுத்திக் கொண்டிருக்கின்றன. அரைக்காலனிய, பின்னடைந்த நாடுகளில் தேசிய இயக்கங்கள் பலவீனப்பட்டும் பொதுவுடைமை இயக்கங்கள் சின்னாபின்னப்பட்டும் கொண்டிருக்கின்றன. மக்களிடையே சமூக மாற்றத்துக்கான உணர்வும் எழுச்சியும்

**ஹோ சி மின் பாட்டாளிவர்க்க சர்வ தேசியக் கொள்கையில் ஊன்றி நின்றவர். அதே நேரத்தில் அவர் மாபெரும் தேசபக்தர். அவரது தேசியம் பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் ஒரு பகுதியாகவும், அவரது பாட்டாளி வர்க்க சர்வதேசியம் தேசியத்தின் ஊடே பயணம் செய்து அடைய வேண்டிய ஓர் இலக்காகவும் இருப்பதைக் காணலாம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஒரே ஒருமுறை

உலகில் எங்கும்
உன்னைச் சுமந்து செல்லக்காத்திருக்கிறது
புகைவண்டி.

இருந்த இடத்திலேயே உன்னை நீ
அறிந்து கொள்ள
ஒரு ஜோடி புத்தகங்கள்
இன்னமும்

உனது கற்பனைகளை துளையிட்டு
பால்வீதி யெங்கும் பயணப்படும்
விஞ்ஞானம்

விற்க வாங்கவென சந்தையில்
உன் தேவைகளை பூர்த்தி செய்யும்
பொருட்கள்

எந்த நேரத்திலாவது
எப்பொழுதாவது ஒருமுறை
ஒரே ஒரு முறை
யாருக்காவது பரிசளித்துவிடு
ஒரு மலரை,

அப்பாஸ்

முன்னேறிக் கொண்டிருக்கின்ற சூழலில் அவற்றை ஒருங்கு திரட்டுவதற்குரிய வலுவான, ஒன்றுபட்ட அமைப்புகள் சாத்தியமற்றும் அல்லது தள்ளிப்போடப்பட்டும் உள்ளன. இத்தகைய சூழலில் ஹோசிமின் என்ற **ஒளி மிக்க நட்சத்திரம்** (ஹோசிமின் என்பதன் பொருள்) நமக்கு வழங்கியது யாது எனக் கண்டறிய முனைதல் தேவை. இத்தகைய தேவையை இங்கே முழுமையாக நிறைவேற்ற இயலாதெனினும் ஒருசில அம்சங்களைச் சுட்டிக் காட்டுதல் பொருத்தமாக இருக்கும்.

ஹோசிமின் அரசியல் வாழ்வு முழுவதும் **ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையைக்** காணலாம். பிரெஞ்சு, ஜப்பான், அமெரிக்கா ஆகிய மூன்று ஏகாதிபத்திய நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளான இந்தோ-சீன மக்களின் விடுதலை, ஏகாதிபத்திய எதிர்ப்பில் குடிகொண்டுள்ளது என்பதை நிரூபித்துக் காட்டினார். ஏகாதிபத்தியத்தை **மூங்கில் பிசாசு** (Bamboo Dragon) என வர்ணித்தார். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் சலித்துவிடாமலும் களைத்து விடாமலும் இருக்க மக்களின் உணர்ச்சிகட்குத் தோழர் ஹோசிமின் உற்சாகம் ஊட்டிக் கொண்டே இருந்தார். ஏகாதிபத்தியப், ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான யுத்த மோதல்கள் ஆகியவை குறித்த லெனினிய வரையறை குறித்து இன்றைக்கு உலகில் (மார்க்சியக் கருத்துலகில்கூட) பல கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்ற சூழலில், லெனினியப் போர்ப்படையின் உன்னதத் தளபதியான ஹோசிமின்னின் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு இன்றைக்கும் நமக்குத் தேவைப்படுவதாக உள்ளது.

பின்னடைந்த ஆசிய நாடுகளில் உற்ற பொதுவுடைமையாளர்க்கு லெனின் ஓர் எச்சரிக்கை கொடுத்திருந்தார். அங்குள்ள விவசாயிகளின் புரட்சிகரத் திறன்கள் பயன்படுத்தப்பட்டு, விவசாயிகள் இயக்கத்தை முதலாளிய தேசிய வாத இயக்கத்திடமிருந்து பிரித்து, அதை வென்றெடுக்கும் பொழுதே ஆசியநாடுகளில் புரட்சி சாத்தியம்எனக் குறிப்பிட்டிருந்தார். இந்தியப் பொதுவுடைமை இயக்கம் தவறவிட்ட இந்த எச்சரிக்கையைக் கடைப்பிடித்து வென்ற கட்சிகளில் முதன்மையானவை, சீனப் பொதுவுடைமை இயக்கமும் இந்தோ சீனப் பொதுவுடைமை இயக்கமும் ஆகும். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் **விவசாயிகளின் புரட்சிகரத்திறன் பயன்படுத்தப் பட்டாலன்றி விடுதலை இல்லை** என்ற லெனினியத்தைச் சரியாக உணர்ந்தவர் ஹோசிமின்.

பின்னடைந்த நாடுகளில் விடுதலைக்கான பாதை எதிரிகளுடனான **ஆயுதப் போராட்டமே** என்பது தோழர் ஹோசிமின கருத்தாகவும் நடைமுறையாகவும் இருந்தன. கிராமப்புற மக்களிடையே ராணுவத் தளத்தை அமைத்துக் கொண்டு, கெரில்லாத் தாக்குதல்கள் மூலமாக இராணுவ, அரசியல் அதிகாரத்தை விரித்துத் தளப் பகுதிகளை அமைத்துக் கொண்டு இறுதியில் நகரங்களில் ஆயுத எழுச்சிகளை ஏற்படுத்துவதன் மூலமாக விடுதலை அடைகிற நீண்டகால மக்கள் யுத்தப்பாதையே ஹோசிமின் பயன்படுத்திய பாதையாக இருந்தது. தென் வியத்நாமில் பொம்மை அரசை ஏற்படுத்திக் கொண்டு ஆண்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்த கெரில்லாத் தாக்குதல் முறையும் இந்தப் பாதையின் ஓரம்சமாகவே இருந்தது. இந்தப் பாதையை சோவியத் ரசியா அன்று அங்கீகரித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிய நாடுகளில் உள்ள பொதுவுடைமை இயக்கங்கள், தொடக்கம் முதற்கொண்டே இராணுவத்தைக் கட்டி அமைத்தனஎன்பதைத் யும் (இந்தியாவைத் தவிர) ஆசிய நாடுகளில் புரட்சியை நடத்திய இயக்கங்கள் இந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்திருந்தன என்பதையும் இங்கே நினைவு கூரவேணடும்.

தோழரின் பிந்தைய கால எழுத்துகளையும் நடவடிக்கைகளையும் காணும் பொழுது,

www.tamilarangam.net



ஒரு பொதுவுடைமைக் கட்சி ஆட்சியதிகாரத்துக்கு வரும் முன்பும் வந்தபின்னரும் **மக்களைச் சார்ந்திருப்பதில்** அதிக அழுத்தம் கொடுத்திருப்பதாகவே தெரிகிறது. ஆட்சியதிகாரத்துக்கு வருமுன்னா மக்களைச் சார்ந்திருக்கவில்லையெனில் புரட்சி நடைபெற்றிருக்க இயலாது; வந்தபின்னர் மக்களைச் சார்ந்திராமல் அதிகாரத்துவத்தை மட்டுமே பெரிதும் சார்ந்திருந்தால், புரட்சியின் பயன்களைத் தொடர்ந்து தக்க வைக்க இயலாது. புரட்சிக்கு முந்தைய சமூகத்தினரான நாம் ஹோசிமின்னிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியனவற்றுள் இது முதன்மையாகும்.

ஹோசிமின் 1922 முதல் பொதுவுடைமை அகிலத்துடன் தொடர்பு கொண்டு, அகலத்தின் பல பொறுப்புகளை நிறைவேற்றியவர்; பிரெஞ்சுப் பொதுவுடைமைக் கட்சியின் நிறுவனத்தலைவர்களில் ஒருவர். குடியேற்ற நாடுகளின் விவசாய இயக்கம் குறித்த சர்வதேச அமைப்பின் தலைமைக்குழுவில் பணியாற்றியவர். பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கொள்கையில் ஊன்றி நின்றவர். அதே நேரத்தில் அவர் மாபெரும் தேசபக்தர். அவரது தேசியம் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் ஒரு பகுதியாகவும், அவரது பாட்டாளிவர்க்க சர்வதேசியம் தேசியத்தினூடே பயணம் செய்து அடையவேண்டிய ஓர் இலக்காகவும் இருப்பதைக் காணலாம்.

1957இல் தொடங்கி அனைத்துலகப் பொதுவுடைமை இயக்கத்தில் ஏற்பட்ட கருத்தியல் விவாதங்களில் ஹோசிமின் பங்களிப்பு எப்பொழுதும் தெளிவுள்ளதாகவே இருந்தது எனக் குறிப்பிட முடியாது. 1957 இல் குருச்சேவ், ஸ்டாலினின் மீது சேற்றை வாரி இறைத்தபொழுதும் 1963இல் சீனா முன் வைத்த 25 திட்டத்தின் பொழுதும் அவரது நிலைபாடுகள் குறிப்பிடத்தக்கனவாக அமையவில்லை. அன்றைய காலத்திய பெருந்தலைவர்களில் ஒருவராக இருந்தபொழுதினும் 1928 களில் அகிலத்தில் ஸ்டாலினுக்கும் டிராட்ஸ்கிக்கும் இடையிலான கருத்து மோதல்களில் ஸ்டாலின் பக்கம் உறுதியாக நின்றவர் என்ற விதத்திலும் 1957 களில் ஸ்டாலின குறித்த விமரிசனங்களின் மீது ஹோசிமின் பங்களிப்பு தெளிவுற்றதாகவே இருந்தது. **மாசேதுங் சிந்தனையேதமது வழிகாட்டி** என வியத்நாம் பொதுவுடைமைக் கட்சியும் ஹோசிமின்னும் வெளிப்படையாக அறிவித்தபொழுதினும்.

1963இல் சீனா முன்வைத்த 25 அம்சத் திட்டத்தின் அடிப்படையிலான பொதுவுடைமைக் கட்சிகளின் ஒருங்கிணைப்பை ஹோசிமின் உறுதியாக மறுத்துரைத்தார். சீனத்துக்கும் ரசியாவுக்கும் இடையிலான நட்புறவை எவ்விதத்திலாவது கட்டவேண்டும் என்பதில் அக்கட்டத்தில் உறுதியாக இருந்தார் பொதுவுடைமை விவாதங்களில் சீனத்துக்கும் ரசியாவிற்கும் சம இடைதூரத்தில் நிற்கும் இந்த நிலைபாடு ஹோசிமின் என்ற உலக புரட்சிகர தோழனின் பங்களிப்பை சிறிது ஊனப்படுத்துகிறது. இதற்கு அன்றைய வியத்நாமிய தேசிய சூழல் எந்த அளவுக்குக் காரணமாக அமைந்திருக்கக்கூடும் என்பதை நாம் கண்டறிந்தாக வேண்டும். இந்தச் சிறு இடைவெளியைத் தாண்டி உலகப் புரட்சிகர இயக்கத்துக்கு ஹோசிமின் ஆற்றிய பங்களிப்பு என்றும் நினைவு கூரப்படவேண்டியதாகும்.

குடியேற்ற/அரைக்குடியேற்ற/ நவீனக் குடியேற்ற நாடுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, விவசாயிகளின் புரட்சிகரத்திறனை மையமாகப் பயன்படுத்துதல, நீண்டகால மக்கள் யுத்தப் பாதை, மக்களைச் சார்ந்திருத்தல் என்பன போன்ற அரசியல கருத்துகளைப் பயன்படுத்தவேண்டிய தேவையை ஹோசிமின் நூற்றாண்டு விழா நமக்கு நினைவுபடுத்துகின்றது. இதற்கு அனைத்து மக்களின் ஆதரவு தேவை எனவுணர்ந்த ஹோசிமின கலைஞர்களுக்கு அறைகூவல் விடுகின்றார்:

ஒரு நாடு ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இருக்கும் பொழுது, அதன கலை இலக்கியங்கள் சுதந்திரத்தை இழந்து நிற்கும். அவை சுதந்திரத்தைப் பெற வேண்டுமானால், எழுத்தாளர்களும் கலைஞர்களும் புரட்சியில் இணைய வேண்டும்.

அனைத்துத்தரப்புமக்களும் எழுந்து நிற்கும் பொழுது, ஹோசிமின் வர்ணித்த மூலையில் பிசாசுகள் தீப்பற்றிக் கரியாய்ப் போகும். அவர் ஒரு தடவை குறிப்பிட்டார்.

> மக்களின் விருப்பத்துக்கு குறுக்கே
> யாரும் நிற்க இயலாது.

இத்தகைய மகத்தான கலைஞரை—அரசியல் வாதியை நினைவுகூர்வதில்மட்டுமலலபின்பற்ற முயல்வதிலும் நாம் பெருமை கொள்ளலாம். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய கலாச்சாரம் உருப்படியாக உருப்பெற்றிராத இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் அமைவது என்பதுதான் வரலாறாக அமைந்தது

□

''மொழி வெறும் தொடர்பு சாதனம் மட்டும் தானா'' எனும் கட்டுரையை சனவரி 90, பாலம் இதழில் வெளியிட்டிருந்தோம். கட்டுரையை எழுதியிருந்தவர் தோழர் சி அறிவுறுவோன். நார்வே நாட்டிலிருந்து வெளிவரும் 'சுவடுகள்' என்னும் இதழில் திரு ஜனகன் மறுப்புக் கட்டுரையொன்றை எழுதியுள்ளார். அதன் தலைப்பு 'மொழிபற்றிய ஒரு பிரச்சனை'. அதற்கு நாம் நமது மறுப்பைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். இம் மறுப்புக் கட்டுரை தோழர் சி. அறிவுறுவோன் அவர்களால் மீண்டும் வாசகர் முன்வைக்கப்படுகிறது — ஆசிரியர்

''மொழியைப் பாதுகாத்து வளப்படுத்துவதிலோ அல்லது அஃதோர் நிலையான மக்கள் சமூகத்தின் அடையாளம் என்பதிலோ புரட்சியாளருக்கும் முற்போக்காளருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது என நினைக்கிறோம். இதை எவ்வாறு நடைமுறைப் படுத்துவது என்ற வரலாற்றுக் கண்ணோட்டமே வேறுபட்டிருக்கிறது. ஆனாலும் விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் விளக்க முற்பட்ட அறிவுறுவோன்கூட அடுத்த கட்டமாக எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்ற பரிசோதனை முயற்சியையோ அல்லது இந் நடைமுறையானது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியோ எதுவும் கூற முற்படாதது ஏன்?'' என்று ஜனகன் நம்மீது குற்றச்சாட்டை முன் வைக்கிறார்.

முதலில் வடிவம் பற்றிய பிரச்சினை. தலைப்புக்கு அப்பாற்பட்டு பொருள் விரியத் தேவையில்லை என்பது. இரண்டாவது நமக்கு மார்க்சியத்தின் மீதுள்ள அழுத்தமான நம்பிக்கையினால் இடது சாரிகளும் முற்போக்காளர்களும் மொழித் தொடர்பாகவும் தங்கள் செயல்பாட்டை விரிவுபடுத்த வேண்டும் எனக் கூறியதோடு நிறுத்திக் கொண்டோம். இது நம் குற்றமல்ல.

அதே கட்டுரையில் திரு ஜனகன் அவர்கள், ''ஒரு சமூகத்தின் உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையிலான பிரதான சங்கிலியாக மொழி அமைந்து விடுகிறது'' என்று கூறுகிறார். அவரே பின்னால் ஓரிடத்தில், ''இங்கும் (இலங்கையில்) கூட மொழியானது மேல்—கீழ் கட்டுமானம் மற்றும் அடித்தளத்தில் விரிவான வளர்ச்சியை எடுக்க முடியாமல் ஏகாதிபத்தியத்திற்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் துணைபோகும் கட்டத்திலேயே அமிழ்ந்துள்ளது'' என்றும் குறிப்பிட்டுள்ளார். இவ்விரண்டில் எது சரி? உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையிலான பிரதான சங்கிலி மொழி என்றால் அதன் செயல்பாட்டுத் தளத்தைக் குறுக்கிப் பார்ப்பதாகும். நமது கருத்து மொழி அடித்தளம், மேல்கட்டுமானம் இரண்டிலுமே தொழில்படுகிறது என்பதுதான். அது எப்படி என்பதனை எமது கட்டுரையிலேயே குறிப்பிட்டுள்ளோம்.

நாம், மார்க்சியவாதிகள் தங்கள் வசதிக்காக அடித்தளம், மேல்கட்டுமானம் எனப் பிரித்துக் கூறுவார்கள் எனக் குறிப்பிட்டது குற்றஞ்சாட்டும் நோக்கிலல்ல. சமுதாய வளர்ச்சியைப் புரிய வைப்பதற்காக மட்டுமே மார்க்சியவாதிகள் அப்படிப் பிரித்துக் கொள்வார்கள் என்ற பொருளிலேயே 'வசதிக்காக' என்று குறிப்பிட்டிருந்தோம். மற்றபடி மேற்கட்டுமானம் அடித்தளத்தின்மீது ஆட்சி செலுத்துவதையோ அடித்தளமே மேற் கட்டுமான உருவாக்கத்திற்கு அடிப்படை என்பதயோ அக்கட்டுரையில் புரியவைக்க வேண்டிய நெருக்கடி எமக்கேற்படவில்லை.

ஆனால் எமது கட்டுரையின் உள்ளடக்கத்திற்குத் தொடர்பில்லாத பலவற்றை விமர்சனமாகத் திரு. ஜனகன் முன்வைத்துள்ளார்.

மூன்றாம் உலக நாடுகளுக்கெல்லாம் ஒரே வேலைத் திட்டத்தைத் திணிப்பதன் மூலம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியாவில் வாழும் நம்மையும் அதற்கு நிர்ப்பந்திக்கிறார். ஆனால், இந்தியாவில் பெருமுதலாளிகள் நிலப்பிரபுக்களை நேச சக்தியாக வைத்துக்கொண்டு அரசைக் கையில் வைத்துள்ளனர் என்று நாம் கருதுகின்றோம். இந்தியாவில் தேசிய இனப் பிரச்சினையைவிட சாதி. மத, இனக்குழுப் பிரச்சினைகளே மேலோங்கியிருப்பதாக நாம் கருதுகின்றோம். தேசிய இனம் முழு வளர்ச்சியற்று சாதி, மதங்களின் முன்னே தாழ்வுற்றுப் போய்விடுவதாகக் கருதுகின்றோம்.

எனவே, தேசிய இன முரண்பாட்டிற்கு முடிவு கட்டும் போதே மொழியின் வளர்ச்சி கட்டற்று அமையும் என்ற முடிவிற்கு நாம் வரத் தேவையில்லாது போயிற்று.

உலகில் முதலாளித்துவம் தோன்றுவதற்கு முன்பும் மொழியிருந்தது. வரையறுக்கப்பட்ட ஆட்சிப் பகுதி இருந்தது. பொருளாதார ரீதியாகக் கட்டுண்ட வாழ்வு இருந்தது. பொதுக் கலாச்சாரம் இருந்தது. அதனால் மக்கள் அப்போதே தேசிய இனமாக உருவாகி விட்டார்கள் என்று எவரும் சொன்னதில்லை. முதலாளித்துவமும் நவீன கலாச்சாரமும் தோன்றியதன் பின்பே, மக்கள் தேசிய இனமாகத் திரள முடிந்ததை மார்க்சியமும் ஒப்புக் கொள்கிறது.

தேசிய கலாச்சாரம் உருப்படியாக உருப்பெற்றிராத இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் அமைவது என்பதுதான் வரலாறாக அமைந்தது என்று சுட்டிக் காட்டியிருந்தோம். எனவே மக்கள் கூட்டத்தின் தொப்பூழ்க் கொடியாக இருந்தாலும் தேசிய இனமாக மக்கள் உருப்பெற, முதலாளித்துவமும் தேசிய கலாச்சாரமும் முன்தேவையாக இருப்பதாக நாம் கருதுகிறோம்.

**அறிவுறுவோன்** □

## மேற்பரப்பில் வாழ்க்கை

முத்துக் குளிப்பவனே
நீ எதைத் தேடுகிறாய்
ஆழத்தில் மூழ்கி?

அங்கே ஒன்றுமில்லை
ஆழத்தில் என்று
எதுவும் இல்லை

மேற்பரப்பில்
சருகாய் மிதக்கிறது
சாரம் இழந்த வாழ்க்கை.
முத்துக் குளிப்பவனே,
ஆழத்தில் இன்று
எஞ்சிக் கிடப்பது
இருள் மட்டும்.

மேலே வா.
எல்லா உணர்ச்சிகளும்
மேலே வந்து விட்டன
எடையில்லாதெதுவும்
ஆழத்திற்கு
துளைத்துச் செல்வதில்லை.

இஷ்டமிருந்தால்
குப்பைகளை சேகரிக்கலாம்.

இயலாவிட்டால்
வீழ்ந்து மிதக்கலாம்
நீயும் ஒரு குப்பையாய்.

**மனுஷ்ய புத்திரன்**

## வழியனுப்புதல்

எனக்கும ஆசைதான்
உன்போலவே வானம் கீறி
பறக்க;
இப்போது முடியாதபடி
வேலையாயிருக்கிறேன்.
என கைக்கொள்ளியில்தான்
எரிவேனென்று
அடம் பிடித்துக் கிடக்கும்
பாட்டியின் கட்டை.
உறிஞ்சப்பட்ட மார்புகளோடு
நிறையுமென்று காத்திருக்கும்
அம்மாவின் வயிறு.
குடி சீட்டாடுதல் தவிர்த்து
எனக்காய் தைக்கபபட்ட
அபபாவின காலிப்பை.
இதயம் கொள்ளாது
கணகள் வரை வழியும்
கனவுகளுடன் தங்கை.
இவர்களுக்காய் இவைகளை
இவைகளுக்காய் இவர்களை
திருப்தி செய்யும் பணியில்—
உதறினால் சிதறி விழும்
தொண்டைமான் சிறகுகளோடு,
"காற்று மதேறி நாமும்
தூரம திண்கிற"—நம்பிக்கையுடன்.
இப்போது வேலையாயிருக்கிறேன்
விட்டு விடுதலையாகிப் போகுமென்
சிட்டுக் குருவியே
இன்னொரு நாள் வா!

**முத்து மகரந்தன்**

www.tamilarangam.net

# அன்புள்ள வின்சென்ட்

□

□

சுகுமாரன்

''நீ ஓவியர்களை மிகவும் நேசிக்கிறாய். நான் சொல்லட்டுமா, மனிதர்களை நேசிப்பதைவிட மகத்தான ஒரு கலையும் இல்லை.''

—வான்கோவின் கடிதம் (1888)

## சூரிய காந்திப் பூவின் முகம்

சில வருடங்களாகத் தேடி அலைந்த அந்தப் புத்தகம் அன்று மாலை எனக்குக் கிடைத்தது. மிகவும் நேசிக்கத் தோன்றிய, இன்றும் நேசிக்கிற சில புத்தகங்களில் அதுவும் ஒன்று. அது கையில் கிடைத்த பின் மற்ற வேலைகள் எதுவும் முக்கியமில்லாதவை. எனது அலுவலகப் பெட்டியில் ஓர் உயிருள்ள இதயம் துடிப்பது போல எனக்குத் தோன்றியது வேலைகளைப் பாதியில் உதறிக்கொண்டு லாட்ஜுக்குத் திரும்பி, படிக்கத் தொடங்கினேன். அதன் நானூற்றுச் சொச்சம் பக்கங்களைக் கடந்து போனது இரவு. கடைசிப் பக்கத்தை முடித்தபோது விடிவதற்கு சிலமணி நேரங்களே இருந்தன. ஒவ்வொரு பக்கத்துக்குமாக நெகிழ்ந்து, இறுதியில் உணர்ச்சிகள் ததும்பி வழிகிற நிலைக்கு வந்திருந்தேன். அந்த மனநிலையுடன் சுவர்களின் போலிப் பாதுகாப்பில் இனி ஒரு கணம் கூட இருக்க முடியாது. லாட்ஜின் காவல்காரனிடம் கெஞ்சி அந்த அகாலத்தில் கதவைத் திறக்கச் செய்தேன்.

**கலையே வாழ்வின் அர்த்தம்**

அலைகளின் சுவாசமும், விடியற்காலைப் பறவைகளின் ஓசையும் படர்ந்திருந்த கடற்கரையில் நெடுந்தூரம், நெடுநேரம் நடந்து கொண்டிருந்தேன் மனதுக்குள் 'வான்கோ, வான்கோ' என்ற பெயரின் எதிரொலி விம்மித் தணிந்து கொண்டிருந்தது. அன்று ''வின்சென்ட் வான்கோ'' என்ற சென்ற நூற்றாண்டு மனிதனை நேசிக்கத் தொடங்கினேன். இப்போதும் சூரிய காந்திப் பூக்களைப் பார்க்கும் போதெல்லாம் பைத்தியம் மின்னும் கண்களுடன் அந்த செம்பட்டைத் தலையனின் முகம் நினைவில் வந்து போகிறது. அந்தப் புத்தகம் 'லஸ்ட் ஃபார் லைஃப்'.

இந்த நேசம் வின்சென்ட் வான்கோ என்ற ஓவியச் சாதனையாளரின் மேதைமையைப் பாராட்டித் தோன்றியதல்ல. அவர் வாழ்ந்த வாழ்க்கையின் தீவிரத்தையும், செறிவையும் குறித்த வியப்புணர்வைச் சார்ந்தது. கலைக்கும், அதன் மூலமாக மனித இனத்துக்கும் முழுமையாகத் தன்னைச் சமர்ப்பித்துக் கொண்ட கலைஞன், வான்கோவைப் போல எவருமில்லை. கலையின் வாழ்வின் அர்த்தமாகவும், தான் வாழ்ந்த வாழ்க்கையே கலையாகவும் இயங்கிய பெரும் கலைஞன் வான்கோ. கலையும், கலைஞனும் வேறு வேறு என்று கருதப்படும் நமது சிந்தனைச் சூழலில் இன்னொரு வான்கோவைக் கற்பனைதான் செய்ய முடியும். வான்கோ, சென்ற நூற்றாண்டுக் கலையில் ஒரு பொருந்தாப் பிறவி. இந்த நூற்றாண்டுக்கோ முன்னோடி.

## வியாபாரியும் ஓவியனும்

தியோடரஸ் என்ற புரொட்டஸ்டன்ட் பாதிரியாரின் ஐந்து பிள்ளைகளில் மூத்தவர் வின்சென்ட் வில்ஹெம் வான்கோ. வின்சென்ட் பிறப்பதற்கு சரியாக ஒரு வருடம் முன்பு, அதே தேதியில் பாதிரியாரின் மனைவி கார்னீலியாவுக்குக் குறைப் பிரசவத்தில் ஒரு பிள்ளை பிறந்து இறந்தது. அதன் பெயரும் வின்சென்ட். வின்சென்ட் வான்கோவின் ஆயுட்கால நண்பனும், போஷகனுமான, இளைய சகோதரன் தியடோர — தியோ — அவருக்கு நான்கு வயது இளையவன், மற்ற மூவரும் பெண்கள். இயல்பிலேயே வின்சென்ட் தனியனாக இருந்தான்.

தியோடரஸ் பாதிரியார் பிள்ளைகளுக்கு சுமாரான கல்வி பெறும் வாய்ப்பை உருவாக்கித் தந்திருந்தார். ஆனால் அவர்களுடைய எதிர் காலம் என்னவாக இருக்கலாம் என்று அவருக்கோ, தாங்கள் என்னதான் ஆகலாம் என்று பிள்ளைக்கோ தீர்மானம் எதுவும் இல்லாமலிருந்தது. இரண்டு பிள்ளைகளுக்கும் இடையில் உடன்

www.tamilarangam.net



பிறந்த பாகத்தை மீறிய ஒட்டுறவு இருந்தது. ஒரு அபூர்வமான தோழமை. இந்த அன்பின் நெருக்கம் மரணத்தாலும் விலக்க இயலாத ஒன்றாக நீடித்தது. பிற்காலத்தில் வான்கோ தியோவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தங்களது வாழ்க்கையின் திருப்புமுனைக் காலக் கனவைப் பற்றி நினைவு கூர்ந்தார். ''ஹேகின் சாலைகளில் இரண்டு சகோதரர்கள் நடந்து போகிறார்கள். ஒருவன் சொல்கிறான்; எனக்கு முதலில் வேண்டியது பொருளாதார பலம். வியாபாரம் தொடங்க வேண்டும் என்னால் ஓர் ஓவியனாக முடியுமென்று தோன்றவில்லை. மற்றவன் : நான் நாயைப் போல ஆகிக் கொண்டிருக்கிறேன். எதிர்காலத்தில் அசுத்தமானவனாக முரட்டுப் பிடிவாதமுள்ளவனாகவும், ஆகிவிடுவேன். வறுமைதான் எனக்கு விதிக்கப்பட்டிருக்கும் என்று இப்போதே தெரிகிறது. இருந்தாலும் நான் ஓவியனாகத்தான் இருப்பேன்.'' உண்மையிலேயே இருவரின் எதிர்காலமும் அப்படித்தான் அமைந்தது. அவர்களது மாமாவான மற்றொரு வின்சென்ட் வியாபாரத்தில் சுமாரான வெற்றி பெற்றிருந்தார். அவர் தனது நிறுவனங்களில் ஒன்றான கூப்பல்ஸ் காட்சியகத்தில் இரண்டு பையன்களையும் வேலைக்குச் சேர்த்து விட்டார். பதினாறாவது வயதில் வின்சென்ட் கூப்பல்ஸின் ஹேக் காட்சியகத்தில் ஓவிய விற்பனையாளனாக பணி புரியத் தொடங்கினார். மூன்றாவது வருடம் லண்டன் கிளைக்கு மாற்றப் பட்டார்.

### முதற் காதலின் கசப்பு

வான்கோவின் வாழ்க்கையில் முதன் முதலாக ஒரு பெண் எதிர்ப்பட்டது லண்டணில்தான். பத்தொன்பது வயது உர்சுலா. அவளும், அவளுடைய விதவைத் தாயும் வசித்து வந்த வீட்டில் மாடியறை ஒன்றை வின்சென்ட்டுக்கு வாடகைக்கு விட்டிருந்தனர். ஓவியப் பிரதிகளைப் பார்க்க, அவருடன் பேச வந்து போகும் உர்சுலா மீது வின்சென்ட்டுக்கு ஆர்வம் கிளர்ந்தது. அவளுக்கும் அவர் மீது அன்பிருந்தது. குழந்தைக்கு விளையாட்டுப் பெம்மைமீது தோன்றும் அன்பு. குழந்தைத் தனம் கலையாத உர்சுலாவுக்கு வின்சென்ட் ஒருகூட்டாளி. ஒரு பொம்மை. வின்சென்ட் அவளைக் காதலிக்கத் தொடங்கினார். பல முறை

**நேசித்தலே முக்கியம்**

அவளிடம் தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி வேண்டினார். அவை நிராகரிக்கப்பட்டன. அவளுக்கு ஏற்கனவே திருமணம் நிச்சயிக்கப்பட்டிருக்கும் விஷயம் அப்போதுதான் வெளிப்பட்டது. ஆனால் வின்சென்ட் அதைப் பொருட்படுத்தவில்லை. 'நேசித்தலே முக்கியமானவை, நேசிக்கப் படுவதல்ல' என்பது அவருடைய காதல் சித்தாந்தம். எனவே தொடர்ந்து அவளிடம் வற்புறுத்திக் கொண்டிருந்தார். பொறுமையிழந்த அவள் தாய் வின்சென்டை வீட்டைக் காலி செய்ய நிர்ப்பந்தித்தாள். அதே சமயம் வேலையில் கவனக் குறைவு காரணமாக கூப்பில்ஸ் காட்சியகம் அவரை நீக்கம் செய்தது. வின்சென்ட் துயரத்துடன் வீடு திரும்பினார்.

### சுவிசேஷகரின் அங்கி

அமைதியற்ற மனதுடன் வீட்டில் ஒதுங்கியிருப்பது வின்சென்ட்டுக்குச் சித்திரவதையாக இருந்திருக்க வேண்டும். கடைசி முறையாக உர்சுலாவைக் கேட்டுப் பார்ப்போம என்று புறப்பட்டு வந்தார். இம்முறை அவரைக் கண்டதும் அவள் வீட்டுக் கதவு மூடப் பட்டது. அந்த ஒலி, மறுப்பின் ஒலி. வான்கோவின் ஒவ்வொரு காதலிலும அந்த மறுப்பு எதிரொலித்தது. வாழ்க்கை முழுவதும தோல்வியின நிழல் அவரை முந்திச் சென்று கொண்டிருந்தது. மீண்டும் பெற்றோரிடம திரும்பச் செல்ல மனமில்லாமல், உர்சுலாவைப் பற்றிய நினைவுகளுடன் லண்டனுக்கு அருகில், ராம்ஸ்கேட்டில் ஆசிரியராக வேலைக்குச் சேர்ந்தார். சம்பளம எதுவும் கிடையாது. உணவும் இருப்பிடமும இலவசம். உர்சுலாவைப் பற்றிய ஞாபகங்கள் மட்டுமே மகிழ்ச்சி கொள்ளக் கிடைத்த ஒரே சந்தர்ப்பம். சில காலம் அங்கே தங்கினார். இதற்கிடையில் உர்சுலாவின் திருமணம் முடிநதது. வின்சென்ட் தன்னுடைய நொறுங்கிய இதயத்தைத் திரட்டிக் கொண்டு பெற்றோரிடம திரும்பிப் போனார்.

சுயநலச் சிந்தனைகள் தான் துக்கத்துக்குக் காரணம். மகத்தான இலட்சியங்களைக் கைக்கொண்டு சுயநலமின்றிச் செயல்பட்டால் துக்கத்திலிருந்து விடுபடலாம். வீட்டிலிருந்த காலத்தில் வின்சென்ட் இந்த வழியில் சிந்திக்கத் தொடங்கியிருந்தார். எனவே வேதாகம

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படிப்புக்குச் செல்லும்படி தந்தை வற்புறுத்திய போது சம்மதித்தார். ஆப்ஸ்டர்டாம் வந்தார். இங்கே அவருடைய இரண்டாவது காதல் காத்திருந்தது. அதன் பெயர் கேய் என்ற கீ வோ. கேய் வின்சென்டைவிட வயதில் மூத்தவள். தவிர ஒரு குழந்தையின் தாய். வின்சென்டின் சித்தாந்தப்படி இவை எதுவும் பொருட்டல்ல. எனினும் அவர் தன் காதலை வெளியிடாமல் மனதுக்குள் ஒளித்து வைத்துக் கொண்டார்.

பெல்ஜியத்தில்—போரினாஜ் என்ற சுரங்கப் பகுதிக்கு சுவிசேஷ போதகராக அனுப்பப்பட்டார் வின்சென்ட். அந்த வாழ்க்கையின் அனுபவங்களே அவரை அவராக்கியது. போரினாஜ் வாழ்க்கை நரகத்தின் மறு பதிப்பாக இருந்தது. பட்டினியும் வறுமையும் அங்கே நிரந்தரம். ‘‘பெரும்பாலும் விஷக் காய்ச்சலும், டைபாயிடும் அந்த மக்களை ஆக்ரமிக்கின்றன. அப்போதெல்லாம் அவர்களுடைய தூக்கத்தில் பேய்க்கனவுகள். அவர்கள் வலிப்பு நோயால் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு வீட்டில் எல்லோருக்கும் ஜுரம். உதவி செய்ய ஒருவரும் இல்லை. அங்கே நோயாளிகளே நோயாளிகளுக்குச் சிசிச்சை அளித்துக் கொள்கிறார்கள். சுரங்கத் தொழிலாளர்களில் பலரும் எலும்புருக்கி நோயால் வெளிறியவர்கள். இளமையிலேயே கிழடு தட்டிப் போகிறவர்கள். பெண்கள் எல்லோரும் வெளிறிக் களைத்தவர்கள். சுரங்கங்களைச் சுற்றித் தொழிலாளர்களின் குடிசைகள். அவற்றைச் சுற்றிப் புகை படிந்து இறந்த மரங்கள், கருவேல முள் வேலிகள், மலம், சாம்பல், கரிக் குவியல்கள்’’ என்று தியோவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார்.

உண்மையில் போரினாஜில்தான் வாழ்க்கையின் அர்த்தம் பற்றிய கேள்வி வின்சென்ட் வான்கோவுள் உயிர்த்தது. சுரங்கத் தொழிலாளர்களின் துயர முகங்களிலிருந்து அந்தக் கேள்வி அவரிடம் மாறியது. நிரந்தர வேதனைகளும், இரக்கமற்ற சுரண்டலும் மனிதர்களைப் பிடுங்கித் தின்னும் போது சுவிசேஷப் பிரசங்கம் எதற்கு? அங்கே விவிலியப் புத்தகத்தை விடவும் உருளைக் கிழங்கே ஆன்மாவுக்கு நெருக்கமான வஸ்து. புதிய சுவிசேஷகர் தன்னுடைய வருமானம், உடைகள் எல்லாவற்றையும் அவர்களுக்கே செலவிட்டார். தனக்கு வழங்கப்பட்ட வசதிகளையும், சலுகைகளையும் அவர்களுக்கே பகிர்ந்து கொடுத்தார். அவர்களில் ஒருவராக ஆனார்.

சில மாதங்களுக்குப் பிறகு திருச்சபை வின்சென்டுக்கு கடிதம் எழுதியது: ‘‘உங்கள் பணியில் திருப்தியில்லை. ஒரு சுவிசேஷ போதகர் அவருக்குரிய அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். சுரங்கத் தொழிலாளியின் அழுக்கு உடையுடன் அவர் திரிவது கௌரவமற்ற செயல். ஒரு சுவிசேஷகர் இடுங்கிய அறையில் வசிப்பது அவமானகரமானது. அவர் இயேசுவின் போதனைகளைப் பரப்பினால் போதும்.’’ இயேசுவாக மாற வேண்டிய அவசியமில்லை! வின்சென்டுக்கு இயேசுவாக மாறும் நோக்கமில்லை. எனினும் இயேசுவின் போதனைகளிலிருந்து உருவானதைப் போன்றது வின்சென்டின் மதம். எனவே வின்செனட் சுவிசேஷகரின் அங்கியைக் கழற்றி எறிந்தார்.

## ‘கலைஞன் — கலைஞன் மட்டுமே’

சுரங்கத் தொழிலாளர்களின் தோழனாக அங்கேயே தங்கி விடத் தீர்மானித்தார் வின்செனட். வருமானமற்ற வாழ்க்கை. துயரங்கள் நடுவில் அவராக வரித்துக் கொண்ட சிலுவைப் பயணம். இவற்றுக்கிடையில் அவர் உருமாற்றமடைந்தார். வாழ்க்கையின் அர்த்தத்தைக் காண ஒரே வழி தன்னை வெளிப்படுத்திக் கொள்வது என்ற முடிவை வின்சென்டின் மனம் தேர்ந்தெடுத்துக் கொண்டது போரினாஜில் வாழ்நத போதுதான் அவர் தன்னை ஓர் ஓவியனாக அடையாளம் கண்டார். போரினாஜ் நாட்களின் இறுதிக் கட்டத்தில் பசியும், பட்டினியுமாகக் கழிந்த நிலையில் அவரது ஆரம்ப வரைப்படங்கள் உருவாயின. அவரது சிரமங்களைக் கண்டு, உணர்ந்த தியோ திரும்ப வீட்டுக்கு அழைத்துப் போனார்.

**யேசுவாக மாற வேண்டாம்**

ஒரு விபத்தில் கணவனை மரணத்துக்கு ஒப்புக் கொடுத்து விட்டிருந்த ‘கேய்’ மன அமைதிக்காக அங்கே வந்திருந்தாள். அதுவரை ஒளிந்திருந்த வின்சென்டின் காதல் அவளைக் கண்டதும் வெளிப்பட்டது. தீவிரமுற்றுப் பரபரத்

www.tamilarangam.net



தது. அவளிடமும் திருமணம் செய்து கொள்ளும்படி இரந்தார் வின்சென்ட். அவளுக்கு இந்த வேண்டுகோள் தொந்தரவாக மாறியது. பொறுக்க முடியாமல் அவள், தன்னுடைய வீட்டுக்குத் திரும்பினாள். ஆனால் வின்சென்டின் கடிதங்கள் அவளைத் துரத்திக் கொண்டு வந்தன. ''அவளை நேசித்துக்கொண்டே இருப்பது. இறுதியில் அவள் என்னை நேசிக்கும் வரை'' என்று தியோவுக்குக் கடிதம் எழுதினார். கடைசியில் கேயின் தந்தை, வின்சென்டின் தந்தையிடம் முறையிட்டார்; அந்த 'உதவாக்கரை' மீது முழு வீட்டின் உதாசீனமும் வந்து கவிந்தது. அம்மா கூட 'எங்கோ போய்த் தொலை' என்று சபித்தாள். அன்று வின்சென்டின் மனம் வீட்டைத் துறந்தது. ஒரு நாடோடி அலைச்சலை வரித்துக் கொண்டது.

ஆனால் வின்சென்டை இன்னும் நேசிக்கிற மனம் இருந்தது — தியோ, தியோவின் வாஞ்சையும் புரிந்து கொள்ளலும் வின்சென்டை அவரது வாழ்வின் முடிவான தீர்மானத்துக்கு இட்டுச் சென்றன. வெற்றியோ, தோல்வியோ இனி தனது வாழ்க்கை ஒரு கலைஞனின் வாழ்க்கை — கலைஞனின் வாழ்க்கை மட்டுமே. தியோவின் உதவியுடன் பிரெஸ்ஸல்சுக்குப் போய்ப் பயிற்சி பெற்றுத் திரும்பினார். மூன்று வருடங்களுக்குப் பிறகு தியோவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டார். ''இந்த உலகத்துக்கு நான் ஒருவகையில் கடன்பட்டிருக்கிறேன், கடமைப்பட்டிருக்கிறேன் என்று நான் உணர்ந்தால்தான் அது என்னைப பொருட்டாக மதிக்கும். ஏனெனில் முப்பது வருடங்கள் இந்த பூமி மீது நடமாடியிருக்கிறேன். அதற்கு நன்றியாக சில ஓவியங்களையும் படங்களையும் நினைவுப் பரிசாக விட்டுச் செல்ல விரும்புகிறேன். கலையின் எந்த இயல்பையாவது திருப்திப் படுத்துவதற்காக அல்ல. உண்மையான மனித உணர்வை வெளிப்படுத்துவதற்காக.''

**என்னை நேசிக்கும் வரை நேசிப்பது**

## 'கலைஞனின் குடும்பம்'

வின்சென்ட் வான்கோவின் கலை, தீவிரமடைந்ததும், தனித்துவம் பெறத் தொடங்கியதும் ஹேகில்தான். ஒரு சிறு வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு தனது கலை வாழ்க்கையின் ஜீவன் துடிக்கும் காலப் பகுதியைத் தொடங்கினார். ''ஓவியக் கலைதான் எனக்கு விதிக்கப்பட்ட தொழில்'' என்று தியோவுக்கு எழுதினார். தியோ தனது ஊதியத்தின் ஒரு பகுதியை மாதந்தோறும் வின்சென்டுக்கு அனுப்பி வந்தார்.

ஒரு மாலை நேரம். வழக்கம்போல வின்சென்ட் மாடல்களைத் தேடி அலைந்து மதுபானச் சாலைக்கு வந்து சேர்ந்தார். சமயங்களில் சொற்பத் தொகைக்காக ஏதாவது விலைமாது மாடலாக வரச் சம்மதிப்பாள். அங்கே தான் கிறிஸ்டீனாவைச் சந்தித்தார். வீடுகளில் சலவை செய்து கொடுப்பது அவளுடையவேலை. உபரி வருமானத்துக்காக விபச்சாரத்தையும் மேற் கொண்டிருந்தாள். ஹேக் நகரம் அவளை அவளுடைய இரண்டாவது தொழில் மூலமாகவே அடையாளம் காட்டியது. மாடலாக வரச் சம்மதித்த அவளை வின்சென்ட் அறைக்குக் கூட்டி வந்தார். வெவ்வேறு மாடல்களைத் தேடி அலுப்பதைவிட இது சௌகரியமாகத் தோன்றியது. இது பலமுறை தொடர்ந்தது.

நாளடைவில் கிறிஸ்டீனா அங்கேயே தங்கி விட்டாள். அப்போது அவள் கர்ப்பிணி. ஏற்கனவே நான்கு குழந்தைகள் வேறு. அவளுடைய தாயின் பிடியிலிருந்து மீட்கவும், பழைய அவல வாழ்க்கைக்கு அவள் திரும்பாமல் காப்பாற்றவும் வின்சென்ட் ஆசைப்பட்டார். தியோ அனுப்புகிற பணத்தில் கணிசமான பகுதியும், ஓவியங்கள் விற்றுக் கிடைத்த சொற்பத் தொகையும் அவளைப் பராமரிப்பதிலேயே செலவாயின. சில ஓவியங்களை கூப்பிஸ்சுக்காக வாங்கிக் கொள்வதாக அவருடைய மாமா வின்சென்ட் ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால் அந்த எதிர்பார்ப்பு சிதைந்து போனது. ஹேக் நகரம் முழுவதும் வின்சென்ட்— கிறிஸ்டீனா உறவைப் பற்றிப் பரவியிருந்த முணுமுணுப்பு மாமாவின் காதிலும் இரைச்சலிட்டது. கண்ணியமும், பெருமையும் கொண்ட வான்கோ குடும்பத்திற்கு ஏற்பட்ட இந்த அகௌரவம் ஓவிய விற்பனையைத் தகர்த்தது. மாமா வின்சென்ட் பொறுப்போடு இந்தத் தகவலை வின்சென்டின் தகப்பனார் தியோடரஸின் காதுகளிலும் திணித்தார். அப்பா வருவதற்கு முன்பே கிறிஸ்டீனா ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அவர் வந்ததும் முதலில் கேட்டது: ''இவள் யார்?''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வின்சென்ட் ஆதரத்துடன் சொன்னான். ''என் மனைவி.'' ''உன்னுடைய குழந்தையா இது.'' ''இல்லை'' தியோடரஸ் பாதிரியார் தனது 'உதவாக் கரைப்' பையனைப் பற்றி வேதனைப் பட்டுக் கொண்டு திரும்பிப் போனார். ஆனால் அந்த உறவும் விரைவில் கலைந்தது. ஒன்றரை வருட வாழ்க்கைக்குப் பிறகு கிறிஸ்டீனாவுக்கு அலுப்புத் தோன்றியது. போதுமான வருமானம் வரக் கூடிய தனது பழைய தொழிலுக்குத் திரும்பினாள்.

கிறிஸ்டீனா விலகியபின் வின்சென்ட் மறுபடியும் தனது பாதையின் தனிமையை உணர்ந்தார். அவள் மீது காதல் எதுவுமில்லை. அனுதாபமே இருந்தது. அந்த அனுதாபம் அவளை மணந்து கொள்ளவும் அவரைத் தயாராக வைத்திருந்தது. ஆனால் தியோவின் மறுப்பு வின்சென்டைப் பின் வாங்கச் செய்தது. தியோவுக்கு எழுதினார்; ''தியோ! இடுப்பில் சுமந்து கொண்டோ, மார்புடன் அணைத்துக் கொண்டே குழந்தையுடன் போகிற எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் என் கண்கள் ஈரமாகின்றன, அப்பொழுதெல்லாம் நான் ஸியனைப் (கிறிஸ்டீனாவுக்கு வின்சென்ட் வைத்த பெயர்) பற்றியும், அவளுடைய துரதிருஷ்டத்தைப் பற்றியும் நினைத்துக் கொள்வேன்.''

**ஏமாற்றத்தின் விஷம்**

''சில நாட்கள் வீட்டோடு வசிக்கத் தீர்மானித்திருக்கிறேன். இது உன்னை மிகவும் வியப்படையச் செய்திருக்கும். வீட்டோடு வசிப்பது எனக்கு குமட்டலைத் தரும் விஷயம். எனினும் கடந்த மூன்று வாரங்களாக எனக்கு உடல்நல மில்லை—காய்ச்சலும் குளிரும். அதன் காரணமாகச் சின்னச் சின்ன உபாதைகள்''—நியூனெனிலிருந்து தியோவுக்கு எழுதிய கடிதத்தில் வின்சென்ட் குறிப்பிட்டார். அவர்கள் குடும்பம் அப்போது ஈட்டனிலிருந்து குடிபெயர்ந்திருந்தது. தியோவின் வற்புறுத்தல்தான் அவரை வீடு திரும்பச் செய்தது. வீட்டையொட்டி ஒரு ஸ்டூடியோ அமைத்துக் கொண்டு பணியில் ஈடுபட்டார். அமைதியான சில நாட்கள். ஆனால் அந்த அமைதியும் நீடிக்கவில்லை. அமைதியற்ற மனத்தினனுக்கு ஓய்வும், நிம்மதியும் சாத்தியம் இல்லாதவை. அவன் அலைய விதிக்கப்பட்டவன்.

**அடுத்த இதழில்...**

பேரா. அ. மார்க்ஸ் அவர்களின் ''மார்க்சியம் தோற்றுவிட்டதா'' தொடர் ஆரம்பம்.

பாலுமகேந்திராவின் சந்தியாராகம் விமர்சனம்

அப்பணசாமி, பெருமாள் முருகன் ஆகியோரின் சிறுகதை மற்றும் வழக்கம் போல்

□ □ □

வின்சென்டின் ஸ்டூடியோவுக்கு ஒரு தினசரி விருந்தாளி இருந்தாள். மார்கோட். அவர் ஓவியம் தீட்டும் போது வந்து அவரையும், ஓவியத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பாள். கிறிஸ்டீனாவால் ஏற்பட்ட முறிவுக்குப் பின் அவர் தன்னுடைய இதயத்தைப் பாதுகாப்பாக அடைத்து வைத்திருந்தார். எனவே மார்கோட்டை பொருட்படுத்தவில்லை. குடும்ப வறுமை காரணமாக நாற்பது வயதிலும் திருமணமாகாமல் வாழச் சபிக்கப்பட்டிருந்தாள் அவள். அவளுக்குக் கீழ் ஐந்து பெண்கள். வின்சென்டின் வரவுடன் உற்சாகமும் அவளைத் தேடி வந்திருந்தது. வெகு காலத்துக்குப் பின்பு தனக்குள் பெண்மையின் குதூகலத்தை உணர்ந்திருந்தாள். வின்சென்டை நேசித்தாள். ஆனால் இன்னொரு முறை இதயம் சிதறத் தயாராக இல்லாமலிருந்த அவர் ஒதுங்கி விலகினார். சகோதரிகளின் பொறாமை, வின்சென்டின் பாராமுகம் இரண்டும் மார்கோட்டைத் துளைத்தன. ஏமாற்றத்தின் விஷமருந்தித் தற்கொலை செய்து கொண்டாள்.

ஒவ்வொரு முறையும் அன்போடு சமர்ப்பிக்கப்படும் அந்த இதயம் உதாசீனமாகக் கிழிந்து எறியப்படும். வின்சென்ட் வான்கோ என்ற சலிப்பற்ற சிநேகி, அதைச் சீராக்கி மறு சமர்ப்பணத்துக்குத் தயாராவார். ஆனால், இம்முறை அடக்கி வைத்திருந்த காரணத்தாலேயே அது புழுங்கிச் சிதைந்தது. மறுபடியும் தூரிகைகளுடன் புறப்பட்டார். சென்ற இடம் பாரீஸ். □

(அடுத்த இதழில்)

**உலகிற்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேருந்து நிலையத்தையொட்டிய தெற்கு அலங்கம் வீதி வழியாக திலகர் திடலுக்கு...

□

ஜூன் 6. தஞ்சையில் நல்ல வெயில். கலர் கலராய் கூல் டிரிங்ஸ் கடைகள். வெக்கைக் காற்று. முகத்தைச் சுத்தும் குப்பை. காவல் துறை எச்சரிக்கை: இங்கு சிறுநீர் கழிககக் கூடாது, மீறினால் தண்டிக்கப்படுவீர்!

தெற்கு அலங்கம். தஞ்சாவூர் நகராட்சி ரிக்ஷா நிலையம்...மற்ற வாகனங்கள் இங்கே நிறுத்தக் கூடாது. அதிர்ஷ்டம் அழைக்கிறது. தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு. 1 கோடியே 1 இலட்சம். அண்ணா மராட்டா மெஸ். பெண்களுக்கு தனி இடவசதி உண்டு. தஞ்சாவூர் இரத்த பரிசோதனை நிலையம். பத்மா ஹோட்டல். அறைகள் வாடகைக்கு கிடைக்கும். தமிழ்நாடு இரத்தப் பரிசோதனை நிலையம். டாகடர் நேம் போர்டுகள். தஞ்சாவூர் இராசராச சோழன் வணிக மையம். தியேட்டர் திருவள்ளுவரில் 'நம் நாட்டு ராஜாக்கள்'. தொப்புள்பிள்ளையார் கோவில். காவிரி சிறப்பங்காடி. ஜூன் 9 தஞ்சையில் தமிழர் தன்னுரிமைப் பிரகடன மாநாடு. கம்பன் கைப்பந்துப் போட்டி. ஜூன் 10 தமிழர் தேசிய இயக்க 3வது மாநாடு. அன்னை அபிராமி பரிசகம். தமிழர் எழுச்சி ஓவியக் கண்காட்சி. ஸ்ரீ குமரன் டிபன் சென்டர். டீ, காபி கிடைக்கும். தமிழர்கள் குடும்பத்தோடு காண வேண்டிய ஓவியக் காட்சி.

வருக! வணக்கம்! கண்காட்சித் தொடக்கம்!

தமிழரின் எழுச்சி மிகு வரலாற்றில் சில காட்சிகள். கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன்தோன்றி மூத்தகுடி. கி.மு. 50,000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் வாழ்ந்த குமரிக் காண்டம் (வரைபடம்). கி.மு 30,000இல் இந்தியா—தமிழ்நாடு (வரைபடம்). மறைந்த குமரிக் கண்டத்தில் இருந்த நாடுகள், கடல்கள், ஆறுகள் (வரைபடம்). பழந்தமிழகத்தில் நிகழ்ந்த முதற் கடற்கோள் கி.மு 6087), இரண்டாம் கடற்கோள் (கி.மு 2387), மூன்றாம் கடற்கோள் (கி.மு 1780). சங்க காலத்தமிழகம். தரணிக்கு தமிழன் தந்த தத்துவம்: யாதும் ஊரே யாவரும் கேளீர்!......

பண்டைத் தமிழகத்தின் ஐவகை நிலங்கள் (முல்லை, நெய்தல், குறிஞ்சி, மருதம், பாலை). பண்டைத் தமிழரின் போர் முறைகள் (உழிஞை வாகை, வஞ்சி, தும்பை, கரந்தை, வெட்சி, நொச்சி). தமிழர் வரலாற்றில் அழியாத இடம் பெற்ற நெஞ்சை நெகிழ்விக்கும் நிகழ்ச்சிகள். பாண்டிய நாட்டு எல்லை... சோழநாட்டு எல்லை ...சேர நாட்டு எல்லை (வரைபடங்கள்). களப்பிரரை வென்று தமிழகத்தின் இருளைப் போக்கிய பாண்டியன் கடுங்கோன்...

பண்டைத் தமிழகத்துத் துறைமுகங்கள் (வரைபடம்) பாரதப் போரில் இரு தரப்பினருக்கும் சோறளித்த பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன். மகனை முறை செய்த மனுநீதிச் சோழன். பொற்கைப் பாண்டியன். சிபிச் சக்கரவர்த்தி. முல்லைக்குத் தேர்ந்தது மகிழ்ந்த பாரி. தமிழ்ப் புலவருக்கு தலைகொடுத்த குமணன். ஔவைக்கு நெல்லிக் கனி தந்த அதியமான். மயிலுக்குபோர்வையளித்தபேகன். கிரேக்க வீரர்கள் சோழ மன்னனின் அரண்மனையில் காவல் புரியும் காட்சி; பாண்டிய மன்னனின் தூதுவன் ரோமாபுரி மன்னன் அகஸ்டஸ் அவைக்குச் செல்லுதல். நக்கீரன் சிவபிரானை எதிர்த்த காட்சி (நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே!) அமுதசுரபியின் உதவியால் ஏழைகளின் பசிப்பிணித் தீர்க்கும் மணிமேகலை...

சீனாவில் செங்கிஸ்கான் மகனின் தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கிரேக்க யாத்திரிகரான மெகஸ்தனிஸ், மதுரை நகரம் 'பாண்டேயா' அரசியினால் ஆளப்பட்டது என்று குறிப்பிடுகிறார். இலங்கையை வென்று சிங்களரைச் சிறைபிடித்து தமிழகம் கொண்டு வந்து காவிரிக்கு அணைகட்டிய கரிகால் பெருவளத்தான். பொங்கி வரும காவிரியை அணைகட்டித் தடுத்தான் குடகு மன்னன்,

www.tamilarangam.net



**அணை உடைத்து தடை அகற்றி காவிரியை மீட்டான் இரண்டாம் இராசராசன்...**

யானை கட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை. சினத் தீயால் மதுரையைச் சுட்டெரித்த கண்ணகி. சோழர் ஆட்சியில் குடவோலைத் தேர்தல் முறை (மக்களாட்சி முறைக்கு இதுவே அடித்தளம்). செங்குட்டுவன் வடபுலப் படையெடுப்பு. இமயத்தில் கல்லெடுத்துக் கண்ணகிக்குக் கோவில் கட்டினான் சேரன் செங்குட்டுவன். கி.பி 5ஆம் நூற்றாண்டில் விளங்கிய மூன்று பேரரசுகள் ஹர்ஷர் பேரரசு, வாதாபி சாளுக்கிய அரசு, பல்லவப் பேரரசு—வரைபடம். ஹர்ஷ சக்கரவர்த்தியை வென்ற வீரப்புலிகேசி. புலிகேசியைக் கொன்று வாதாபியை எரித்தான் மாமல்லன் நரசிம்மவர்மப் பல்லவன்.

இராஜராஜ சோழனின் ஈழப்படையெடுப்பு (வரைபடம்). இராஜராஜனின் தூதுவன் ''சோழ சமுத்திரன்'' சீனப் பேரரசின் அவையில். கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு சிங்காதனத்திலிருந்து செம்பியர்கோன் இராஜேந்திரனின் கடல் கடந்த சோழப் பேரரசு(வரைபடம்). இருபதாம் நூற்றாண்டில் அதே நாடுகளுக்கு 'ஆண்ட பரம்பரை' அடிமைகளாய்ச் சென்ற பரிதாபம் (வரைபடம்).

பண்டைத் தமிழர் ஆடல்வகை பழந்தமிழ் நடன நூற்கள், தமிழர் இசைக்கருவிகள் (பட்டியல்கள்). பழந்தமிழரின் வேனில் விழா, இந்திர விழா, குரவைக் கூத்து, உறியடி, கரக ஆட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், காவடி ஆட்டம், மயில் ஆட்டம், நந்தி ஆட்டம், தமிழர் வீர விளையாட்டுகள்.

தமிழர் சமய வரலாற்றில் சில காட்சிகள். இறைவனுடன் இரண்டறக் கலந்த ஆண்டாள். நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம் (திருநாவுக்கரசர்). ராமானுஜர் கோபுரத்தில் நின்று அரிஜனங்களை அந்தணராக்குதல். தில்லை நடராசரை தரிசிக்க வரும் நந்தனாரை நந்தி மறைத்தல். இராசராசன் வெற்றிகளின் சின்னமாக எழுப்பிய தஞ்சைப் பெரிய கோவில்.

தொண்மையான தமிழ் இலக்கிய வரலாறு. ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியன் முன்னிலையில் அதங்கோட்டாசான் தலைமையில் இடைச் சங்கத்தில் தொல்காப்பியம் அரங்கேறியது. பதினெண் கீழ் கணக்கு. தமிழரின் காதல் வாழ்வு. வீரவாழ்வு. பதினெண் மேற் கணக்கு. பாண்டியன் உக்கிரப் பெருவழுதி முன்னிலையில் திருக்குறள் அரங்கேற்றம். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு. உலக மொழிகளில் திருக்குறள் ஸ்ரீரங்கத்தில் கம்ப ராமாயணம் அரங்கேற்றம் (மூன்றாம் குலோத்துங்கன்). தமிழ்ச் சித்தர்கள். ஐம்பெரும் காப்பியங்கள். ஐஞ்சிறுகாப்பியங்கள். தமிழ்த் தேசியக் காப்பியம் கண்ட இளங்கோவடிகள். பல்லவர்கால இலக்கியம். சைவ இலக்கியம். சமண இலக்கியம். வைணவ இலக்கியம். பௌத்த இலக்கியம். கிறிஸ்துவ இலக்கியம். இஸ்லாமிய இலக்கியம். நாயக்கர் கால இலக்கியம்(நூற்பட்டியல்கள்).

செந்தமிழ் வளர்த்த சான்றோர்கள்; வீரமாமுனிவர் (இத்தாலி), இராபர்ட் தே நோபிலி அடிகளார் (இத்தாலி), ஸீகன்பால்கு (ஜெர்மனி), டாக்டர் ஜி. யு. போப் (பிரிட்டன்), டாக்டர் கால்டுவெல் (ஜெர்மனி) ஏரியல் லெமிலேசர் (பிரான்சு).

தமிழ் புதினத் தந்தை வேதநாயகம் பிள்ளை. புதைந்து கிடந்த தமிழ்ப்புதையலை வெளிக் கொணர்ந்த தமிழ்த் தாத்தா திரு. உ. வே. சாமிநாதய்யர். ஆன்றவிந்த தமிழறிஞர் அரசஞ்சண்முகனார். பரிதிமாற் கலைஞர் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார். தேசியமும் தமிழும் வளர்த்த தமிழ்த் தென்றல் திரு. வி. க. முதன் முதலாய் தனித் இயக்கம் கண்ட மறைமலை அடிகளார். நாடு போற்றிய நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார். மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் கண்டபாண்டித்துரைத் தேவர். மொழி ஞாயிறு பெரும் பேரறிஞர் தேவ நேயப் பாவாணர். இருபதாம் நூற்றாண்டில் அதிக நூற்கள் எழுதிய சுத்தானந்த பாரதி. தமிழ்ப் பூங்காவில் மலர்ந்த சிவப்புமலர் ஜீவா. இருந்து கொண்டே இரங்கற்பாபாடிக் கொண்ட கவிஞர் கண்ணதாசன்.

மன்னர்கள், யானைகள், குதிரைகள் வரலாறு; தலைவர்கள் வரலாறு என்று பார்த்துவிட்டு சாமானியர்களான ஈழத் தமிழர்கள் இராணுவ அடாவடித்தனத்தால் பட்ட கொடுமையை புகைப்படக் காட்சியில் கண்டோம். காணப் பொறுக்கவில்லை. தாளாத மனச்சுமையோடு ''வெளியே'' வந்தோம்.

ஜுன் 9. மாநாடு தடை செய்யப்பட்டது. பந்தல்கள் பிரிக்கப்பட்டன. மாநாட்டுக்கு வந்தவர்கள், பொறுப்பாளர்கள் என்று பலர் கைது. கீத்துகள் கட்டப்பட்டன. கைதான கீத்துக் கட்டுகளுக்கு பலத்த போலீஸ் காவல். திலகர் திடல் வாசல் சுவரில் எழுதப்பட்டிருந்த ''தமிழா இனவுணர்வு கொள்'' கோஷம் நேற்றின் மழையில் சற்றே அழிந்திருந்தது. வாசலில் வைக்கப்பட்டிருந்த தட்டியில் ஆங்கிலத்தில் டைப்படித்து ஒட்டப்பட்ட தமிழக அரசு போலீசாரின் தடை உத்தரவு ஆணை.

**சாந்தன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பரந்த புரட்சிக் கண்ணோட்டம் உடைய தமிழ்த் தேசிய கவி

□

தியாகு: பாவேந்தருடன் உங்கள் முதல் சந்திப்பு பற்றிச் சொல்லுங்கள்.

வ. சுப்பையா 1922இல் அவர் வீதியில் கதர் விற்றபோது பார்த்ததாகச் சொன்னேன்.

தி: முதன் முதல் அவரைப் பார்த்தது என்று அதைச் சொல்லலாம். அப்போது உங்களுக்கு 11 வயது. ஆனால், ஒருவரை ஒருவர் இன்னாரென்று தெரிந்து சந்தித்து நட்பு கொண்டது பற்றிச் சொல்லுங்கள்.

வ. சு. : சுயமரியாதை இயக்கக் கூட்டத்துக்குச் சென்றபோது சந்தித்தேன் என்பது நினைவுள்ளது. மற்றபடி சரியாக நினைவில்லை. அப்போதே நெருங்கிப் பழகத் தொடங்கி விட்டோம்.

தி: அந்த ஆரம்ப காலத்தில் உங்களுக்குள் முரண்பாடு தோன்றியது உண்டா?

வ. சு. : பொதுவாக உடன்பாடு இருந்தாலும் சிலவற்றில் முரண்பாடும் தோன்றியது. 1933 ஆம் ஆண்டில் காந்திஜி ஆரம்பித்த அரிஜன சேவை இயக்கத்தில் நான் சேர்ந்து அதன் கிளை அமைப்பைப் புதுவையில் நிறுவினேன். அப்போது புதுவையில் வெளிவந்து கொண்டிருந்த தாய்நாடு வாரப் பத்திரிகையில் பாரதிதாசன் அரிஜன சேவை இயக்கத்தை காந்திஜியின் வைணவ சமய இயக்கம் என்று கண்டித்து எழுதினார். அதைப் பரப்பும் சேவையில் நானும் வேறு சில இளைஞர்களும் முனைந்திருப்பது பற்றி விமர்சித்து எழுதினார்.

தி: பாவேந்தரின் சுயமரியாதை இயக்கப் பணி பற்றி மேலும் சொல்லுங்கள்...

வ. சு. சுயமரியாதை இயக்கப் பிரசாரத்துக்கு **குடியரசு** மட்டும் போதவில்லை. 1930 இல் புதுவை முரசு என்ற பத்திரிகை தொடங்கப்பட்டது. பொன்னம்பலனார், குத்தூசி குருசாமி ஆகியோர் அதில் ஆசிரியப் பணியாற்றினார்கள்.

தி: பொன்னம்பலனார் என்றால் திருமயம் பொன்னம்பலனார் தானே?


வ. சு : அவர்தான். புதுவைமுரசில் பாவேந்தர் நிறைய எழுதினார். விரைவில் அவரே அதற்கு ஆசிரியராகி விட்டார்.

தி: அவரைப் பற்றிய உங்கள் நினைவுகளைச் சொல்லுங்கள்.

வ. சு: பல சமயம் அவர் குப்புறப் படுத்துக் கொண்டு கவிதை எழுதுவதைப் பார்த்துள்ளேன் எது பற்றி எழுதத் தொடங்கினாலும் முடித்து விட்டுத்தான் எழுவார். அடிக்கடி சிகரெட் புகைத்துக் கொண்டே இருப்பார்.

## வ. சுப்பையா பார்வையில் பாவேந்தர்

(தோழர் வ. சுப்பையா தனிப்பேட்டி — சென்ற இதழ் தொடர்ச்சி)



www.tamilarangam.net



தி: தேசிய விடுதலை இயக்கம் தொடங்கிய பிறகு உங்கள் நட்புறவில் ஏதாவது மாற்றம் உண்டா?

வ. சு: தேசிய விடுதலை இயக்கம் எப்படித் தொடங்கியதென்று முதலில் சொல்கிறேன். 1935-36 இல் பிரான்சு நாட்டில்தொழிலாளர் போராட்டங்கள் அலை மோதின. அதன் பயனாய் அங்கே மக்கள் முன்னணி ஆட்சிக்கு வந்தது. புதுவையில் அப்போதுதான் உரு வெடுத்துக் கொண்டிருந்த தொழிலாளர் வர்க்க இயக்கத்துக்கு இது பெரும் ஊக்கமாய் அமைந்தது. அதே கால கட்டத்தில் புதுவையிலும் பற்பல போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் நடை பெற்றன. அரசு கடும் அடக்கு முறையை ஏவியது. துப்பாக்கிச் சூடும் நடைபெற்றது. 1936 ஜூலை 30 ஆம் நாள் புதுவைத் தொழிலாளர்கள் பிரெஞ்சு இராணுவத்தை நேருக்கு நேர் சந்தித்தார்கள். பல தொழிலாளர்கள் இதில் உயிரிழந்தார்கள். இந்தப் போராட்டத்தின் விளைவாகத் தான் 1937 ஏப்ரல் 6இல் தொழிலாளர் தொழிற் சங்க சட்டம் பிறந்தது. இது ஒரு பேரெழுச்சியை உண்டுபண்ணியது. விவசாயத் தொழிலாளர்கள் உட்பட எல்லாத் தரப்புத் தொழிலாளர்களும் சங்கத்தில் திரட்டப் பட்டனர். பாட்டாளி வர்க்கத்தின் இந்தப் பேரியக்கமே புதுவை விடுதலைப் போராட்டத்தின் தொக்கமாயிற்று.

தி: இந்த இயக்கம் தொடர்பாகப் பாவேந்தரின் அணுகுமுறை என்னவாய் இருந்தது?

வ. சு: அவர் இந்த இயக்கத்துக்கு ஆதரவாகவே இருந்தார். பல வகையிலும் ஆதரவு காட்டினார். தொழிலாளர் போராட்டத்தை ஒட்டி 1937 இல் நான் பாரிஸ் சென்று பேச்சு நடத்தினேன். ஜவகர்லால் நேருதான் கடிதம் கொடுத்து என்னை அனுப்பியவர். ஏப்ரல் 6 ஆம் நாள் தொழிற் சங்கச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட போது நான் பாரிசில் இருந்தேன். சட்டத்தின் பிரதியை புதுவைக்கு அனுப்பி வைத்தேன். அந்தச் சட்டத்தை மொழி பெயர்த்து நல்ல தமிழில் அமைத்து வெளியிடுவதற்கு பாவேந்தர் உதவினார் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

தி: தொழிலாளர்கள் தொடர்பாகவும் அவர்களின் உரிமைப் போராட்டங்கள் தொடர்பாகவும் பாவேந்தர் வரைந்த எழுச்சிக் கவிதைகள் அக்காலத்தில் புதுவைத் தொழிலாளர் இயக்கத்துக்கு ஊக்கமாய் அமைந்தது என்று சொல்லலாமா?

வ. சு: சொல்லலாம், அப்போது நடைபெற்ற தொழிலாளர் இயக்கத்தைப் போற்றி பல்வேறு தொழிற் சங்கங்களும் வணிகர் சங்கங்களும் வேறு பல அமைப்புகளும் பாவேந்தரை அணுகி கவிதைகள் எழுதித் தரும்படி கேட்டுப் பெற்று வெளியிட்டன. நான் பாரிசிலிருந்து திரும்பிய பிறகு பல்வேறு அமைப்புகள் சார்பிலும் ஊர் ஊராக எனக்கு வரவேற்பு கொடுத்தார்கள். அதற்கும் பாவேந்தரிடம்தான் கவிதை எழுதித் தரச் சொல்லி வாங்கி வருவார்கள்.

தி: இந்த வரவேற்பு நிகழ்ச்சிகளில் எதிலாவது கலந்து கொண்டாரா?

வ. சு: 1937 இல் பாவேந்தர் மடுக்கரையில் பள்ளி ஆசிரியராக இருந்தார். அவ்வூரில் எனக்கு வரவேற்பு. கிராம எல்லையிலிருந்து மேளதாளத்துடன் அழைத்துப் போனார்கள். பாவேந்தர் குடியிருந்த தெரு வழியே போய்க் கொண்டிருந்தோம். அவர் தமது வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தார். நான் அவரைப் பார்த்து வணங்கி, என்னுடன் வருமாறு அழைத்தேன். அதை அவர் ஏற்றுக் கொண்டு வந்தார். கூட்டம் நடந்த இடத்திலும் என்னோடு அமர்ந்திருந்தார். அவர் அரசுப் பள்ளி ஆசிரியர், அரசியல் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக் கூடாது. இருந்தாலும் நான் அழைத்ததும் அவர் வந்து விட்டார்.

தி: அப்போதே நீங்கள் கம்யூனிஸ்டாகி விட்டீர்களா?

வ. சு: ஆம். தோழர் அமீர்ஐதர்கான் தமிழ்நாட்டில் கம்யூனிஸ்டு இயக்கம் தொடங்குவதற்குத் தூண்டுகோலாய் இருந்தவர். பாஷ்யம் தேசிய இயக்கத்தில் எனது நெருங்கிய நண்பர். வாடா, போடா என்று பேசிக் கொள்ளும் அளவுக்கு நெருக்கம். மதுரை அமெரிக்கன் காலேஜ் மாணவர். தீவிரமான புரட்சிக்காரர். 1932இல் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையின் கொடி மரத்தில் தேசியக் கொடி ஏற்றியவர். சிறையிலிருந்த போது பாஷ்யத்துக்கு அமீர் ஐதர்கானுடன் பழக்கம். பாண்டியில் (பாண்டிச்சேரி) தொடர்பு வேண்டும் என்று அமீர் கேட்டதற்கு பாஷ்யம் என்னைச் சொல்லியிருந்தார். 1934 ஜூலையில் சென்னை சென்று அமீர் ஐதர் கானை சந்தித்தேன்.

தி: தோழர் சுந்தரையாவும் அப்போது சென்னையில்...

வ. சு: ஆமாம், ஆமாம். அவர் லயோலா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார்.

www.tamilarangam.net



நாங்கள் பேசத் தொடங்கி ஒரு மணி நேரம் கழித்து சுந்தரையா வந்தார். மூவரும் இரவு முழுக்க உட்கார்ந்து பேசிக் கொண்டிருந் தோம்.

தி : இந்த சந்திப்புத்தான் திருப்பமாய் அமைந் தது என்கிறீர்கள்...

வ. சு : ஆமாம்.

தி : நீங்கள் அரிஜன சேவா சங்கம் தொடங் கிய போது பாவேந்தர் அதை விமர்சித்து எழுதியதாகச் சொன்னீர்கள். நீங்கள் பொதுவுடைமைக் கருத்துக்கு மாறியது பற்றியும் விமர்சித்தாரா?

வ. சு : இல்லை,

தி : உங்கள் நட்புறவு...

வ. சு : அவர் தமது உள்ளத்தில் ஒருவரை நல்லவர் என்று தீர்மானித்து விட்டால் அளவு கடந்த பாசமும் பரிவும் காட்டுவார். அன்பு மிகுதியால் உணர்ச்சி வசப்பட்டு விடுவார். ஒரு சம்பவம் சொல்கிறேன், கேளுங்கள். 1944 இல் பிரெஞ்சு அரசால் நாடு கடத்தப்பட்டு சென்னையில் தங்கியிருந்தேன். ஒருநாள் பிராட்வே சாலையிலிருந்த அம்பீஸ் கபேயில் காப்பி சாப்பிட்டு விட்டு வெளியே வந்தேன். பாவேந்தர் ஒரு பரிவாரத்தோடு அந்த உணவு விடுதிக்கு வந்து கொண்டிருந்தார். அண்ணா துரை, நெடுஞ்செழியன், வேறுசில சுய மரியாதை இயக்கத் தலைவர்களும் அவரோடு இருந்தார்கள். பாவேந்தர் என்னைப் பார்த்த தும், ''ஆ!'' என்று வியப்புடன் வரவேற்றார். மற்றவர்களைப் பார்த்து ''இந்தப் பிள்ளை யார் தெரியுமா?'' என்றார். அண்ணாதுரை ''எனக்குத் தெரியும்'' என்றார் கவிஞர் மேலும் வியப்புடன் ''அது எப்படி?'' என்றார். ''1938இல் சென்னை சிறையில் என்னோடு இருந்தார்'' என்றார் அண்ணா. கவிஞர் என்னையும் ஓட்டலுக்கு அழைத்தார். மாடி யில் போய் அமர்ந்ததும், கவிஞர் புதுவையில் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து எனது தலைமையில் மக்கள் திரண்டு போராடுவது பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். உணர்ச்சி வசப்பட்டு என்னைப் பாராட்டிப் பேசினார்.

தி : 1947க்கும் 54க்கும் இடைப்பட்ட காலம் புதுவை விடுதலை இயக்கத்தில் இறுதிக் கட்டமாகும். இந்தக் கட்டத்தில் பாவேந் தரின் அணுகுமுறை எப்படி இருந்தது?

வ. சு : அவர் நேரடியாக எதிலும் கலந்து கொள்ள வில்லை என்றாலும் எங்களிடம்

ஓட்டடையின்
ஆக்ரமிப்பு
அசிங்கமானது.

பல்லியின்
ஊர்தல்
அருவருக்கத்தக்கது.

எலிகளின்
நடமாட்டம்
நஷ்டமே.

பாசைகளின்
முகர்தல்
நாற்றம்.

வீடு என்கிற பட்சத்தில்
எல்லாம்
இருக்கும்.

கு. விடுதலை விரும்பி

□ □ □

மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். 1950-ஆம் ஆண்டில் பிரெஞ்சு ஏகாதிபத்தியக் குண்டர்கள் என் வீட்டுக்குத் தீ வைத்து விட்டார்கள்.

தி : இந்த வீடுதானா?

வ . சு : இதே வீடுதான். அப்படி அவர்கள் தீ வைத்ததை அறிந்து பாவேந்தர் மிகவும் ஆத்திரமுறுகிறார்; ''படுபாவிகள் இப்படிச் செய்து விட்டார்களே'' என்று உணர்ச்சி வசப்பட்டு சாடினார். நண்பர்கள் சிலரை அழைத்து வந்து ''பாருங்கள் இந்தக் கொடுமையை'' என்றார்.

தி : புதுவை விடுதலை இயக்கத்துக்கு ஆதர வாக அவர் ஏதாவது கவிதை எழுதியிருக் கிறாரா?

வ. சு : ஆரம்பத்தில் நடைபெற்ற தொழி லாளி வர்க்கப் போராட்டத்தை ஆதரித்தும் வாழ்த்தியும் அவர் எழுதிய கவிதைகள் பலவும் என்னிடமிருந்தன. வீடு எரிக்கப்பட்ட போது அவையும் எரிந்து போயின. ஜவகர்லால் நேரு எனக்கு எழுதிய கடிதங்களும் கூட அந்தத் தீயில்தான் எரிந்து போயின.

தி : 1954இல் புதுவை விடுதலை பெற்றதை வாழ்த்தி அவர் கவிதை ஏதும் எழுதிய தாகத் தெரியவில்லை...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வ. சு : தெரிய வில்லை.

தி : புதுவை விடுதலைக்குப் பிறகு 1955இல் முதல் சட்ட மன்றத் தேர்தலில் பாவேந்தர் போட்டியிட்டாரா? ஏதாவது அரசியல் கட்சி வேட்பாளராகவா?

வ. சு : கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் முற்போக்கு ஜனநாயகக் கருத்துடையவர்களைச் சேர்த்து மக்கள் முன்னணி என்ற அமைப்பை நிறுவியிருந்தோம். அந்த முன்னணியின் சார்பில்தான் பாவேந்தர் தேர்தலில் போட்டியிட்டார். தேர்தல் பிரசாரத்தில் என்னுடன் தீவிரமாகப் பணியாற்றினார். சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 39 பேர்களைக் கொண்ட மன்றத்தில் மக்கள் முன்னணியின் பலம்—19. நான் எதிர்க்கட்சித் தலைவர் ஆனேன். பாவேந்தர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆனார்.

தி : சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று அவைத் தலைமை ஏற்றார் என்று பாவேந்தர் வாழ்க்கைக் குறிப்பில் காணப் படுகிறது...

வ. சு : தற்காலிக அவைத் தலைவராகத் தான் இருந்தார்.

தி : பாவேந்தரின் சட்டமன்றப் பணி குறித்து......

வ. சு : புதுவையில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும், அது பாரதியின் பெயரில் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மக்கள் முன்னணியின் சார்பில் அவரை முன்மொழியச் செய்தோம். அத்தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது.

தி : இடையிலேயே அவர் கட்சி மாறியதாக சொல்லப் படுவது பற்றி...

வ. சு : ஆமாம். அது 57இல் நடந்தது. ஆளும் கட்சியினர் சிலர் கட்சி மாறியதால் அரசு கவிழும் நிலை ஏற்பட்டது. அப்போது நடந்த வாக்கெடுப்பில் பாவேந்தர் ஆளும் கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தார்.

தி : ஏன் அப்படிச் செய்தார்?

வ. சு : அவரோடு நெருக்கமாய் இருந்த நண்பர்களிடம் எல்லையற்ற பாசமும் நம்பிக்கையும் வைத்திருந்தார். சிலர் இதைப் பயன்படுத்தி அவரை ஏமாற்றியும் உள்ளனர். இவ்விதம் ஏமாற்றப்பட்டதை அவரது பலவீனம் என்றுதான் சொல்ல வேண்டும்.

தி : அவர் ஆளும் கட்சியிலேயே சேர்ந்து விட்டாரா?

வ. சு : இல்லை. சுயேச்சையாக இருந்தார். 1966ஆம் வருடத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டுத் தோற்றார். எனது துணைவியார்தான் (தோழர் சரசுவதி) அவரை எதிர்த்து வெற்றி பெற்றவர்.

தி : தமிழ் நாட்டில் பெரியார் அவர்கள் காமராசரையும் காங்கிரசையும் ஆதரிக்கத் தொடங்கியதின் எதிரொலியாகவே புதுவை அரசியலில் பாவேந்தர் நிலை மாறியிருக்கலாமோ?

வ. சு : அதுபற்றி நிச்சயமாகச் சொல்ல முடியாது. எனக்குத் தெரிந்த வரை முன்பு குறிப்பிட்ட அந்த பலவீனம் தான் காரணம்.

தி : முறிவுக்குப் பின் உங்களையும் பொதுவாகக் கம்யூனிஸ்டுகளையும் பாவேந்தர் கடுமையாகத் தாக்கிப் பேசினாரா?

வ. சு : ஆமாம். கடுமையாகப் பேசினார். பஸ் பிரயாணத்தில் எப்போதாவது என்னைப் பார்த்தால் முகத்தைத் திருப்பிக் கொள்வார். பேச மாட்டார்...

தி : கம்யூனிஸ்டுகளும் அவரைத் தாக்கிப் பேசினார்களா?

வ. சு : பேசியிருக்கலாம்.

தி: அப்போதும் அவருக்குப் பெரியார் தொடர்பு உண்டா?

வ. சு: உண்டு.

பாவேந்தர் வீட்டுக்குச் சென்று கவிபாடு கலையில் தேர்ச்சி பெற்றார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தி: புதுவையில் மாஹி, ஏனாம் தவிர இதர பகுதி மக்கள் (பாண்டி, காரைக்கால்) தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள். அந்த முறையில் இயல்பாகவே தமிழ் நாட்டுடன் இணைய வேண்டும் என்ற ஆர்வம் இருக்க வேண்டும். ஆனால் உண்மையில் இதற்கு மாறான நிலையே காணப்படுவது போல் தெரிகிறது. இதற்கு என்ன காரணம்?

வ. சு: பல்வேறு விசேஷ நிலைமைகளைக் குறிப்பிடலாம். பிரெஞ்சு கலாசாரத் தொடர்புகள், இங்கிருந்து போய் பிரெஞ்சு இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்று இன்றும் 1,000 பேர் வரை மாதம் சுமார் பத்தாயிரம் ரூபாய் ஓய்வூதியம் பெற்று வருதல், இங்கு கல்லூரியில் படித்து விட்டு, மேற் படிப்புக்கு பாரிஸ் செல்லும் வாய்ப்பு, இன்னும் அரசு ஊழியர்களுக்குள்ள வசதிகள் — இப்படிப் பலவும் உண்டு.

தி: எது எப்படியானாலும், உடனே இல்லாவிட்டாலும் நாளாவட்டத்தில் அடைய வேண்டிய ஒரு குறிக்கோளாகக் கூட தமிழகத்துடன் பாண்டி இணைப்பு என்ற முழக்கத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சி எழுப்ப வில்லையா?

வ. சு. இல்லை.

தி: இந்தப் பிரச்சினையில் பாவேந்தர் ஏதாவது தனிக் கருத்து கொண்டிருந்தாரா?

வ. சு. இல்லை.

தி; பாவேந்தர் பற்றி வேறு குறிப்பிடத்தக்க நினைவுகள் இருந்தால்...

வ. சு. 1947 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பட்டுக்கோட்டைகல்யாண சுந்தரம் 18வயதில் புதுவைக்கு வந்து கம்யூனிஸ்டுக் கட்சி அலுவலகத்தில் என்னுடன் தங்கியிருந்தார். அப்போது தினமும் பாவேந்தர் வீட்டுக்குச் சென்று கவிபாடு கலையில் தேர்ச்சி பெற்றார்.

தி. 1964இல் பாவேந்தர் நோயுற்று சென்னை பொது மருத்துவமனையில் இருந்தபோது தி. க., தி. மு. க. தலைவர்கள் யாரும் அவரை சென்று பார்க்கவில்லை எனப்படுகிறதே?

வ.சு; யார் யார் போய்ப் பார்த்தார்கள் என்று எனக்குத் தெரியாது.

தி: அவர் இறந்தபின் இங்கு நடைபெற்ற இறுதி நிகழ்ச்சியில் தி. க., தி.மு.க. தலைவர்கள் யாரும் கலந்து கொண்டார்களா?

வ.சு: நெடுஞ்செழியனும் அன்பழகனும் சடலத்துடனேயே வந்திருந்தார்கள் என நினைக்கிறேன். இறுதி நிகழ்ச்சியில் அவர்கள் பேசினார்கள். திராவிட இயக்கத்தின் தனிப் பெரும்கவிஞர் என்று பாவேந்தரைப்போற்றிப் பேசினார்கள். தி. க. தரப்பில் யாராவது கலந்து கொண்டார்களா என்று நினைவில்லை.

தி: 1928இல் தொடங்கி கடைசிக் காலம் வரை பாவேந்தர் திராவிட இயக்கக் கவிஞராகவே இருந்ததாகச் சொல்லலாமா? ஸ்தாபனம், தலைவர்கள் தொடர்பான அதிருப்தி, வருத்தம் எல்லாம் இருந்தாலும் கூட தமது கருத்துகளில் திராவிட இயக்கக் கவிஞராகவே நீடித்தார் என்று சொல்லலாமா?

வ.சு: ஆமாம். அதுதான் சரி.

தி: பாவேந்தர் கடைசிக் காலத்தில் பழைய படி இந்திய தேசியவாதியாகி விட்டதாகச் சொல்ல முடியாது அல்லவா?

வ.சு: முடியாது.

தி: என்னுடைய கணிப்பு: பாரதியை இந்திய தேசியக் கவி (Indian nationalist poet) என்பது போல் பாவேந்தரை **தமிழ்த் தேசியக் கவி** (Tamil nationalist poet) என்று சொல்ல வேண்டும். சரி தானே?

வ.சு: Tamil nationalist poet with a broad revolutionary outlook (பரந்த புரட்சிக் கண்ணோட்டம் உடைய தமிழ்த் தேசியக் கவி) என்று சொல்ல வேண்டும்.

தி: பாரதிக்கும் இதே போல் சொல்லலாமே; Indian nationalist poet with a broad revolutionary outlook என்று?

வ.சு.: ஆமாம்.

தி: பாவேந்தரைப் புரட்சிக் கவிஞர் என்று சொல்லும் போது, தமிழ் இலக்கியத் துறையில் புரட்சி செய்தவர் என்னும் பொருளில்தான் சொல்கிறோமா?

வ.சு.: அது மட்டுமல்ல, சமுதாயத்தில் புரட்சிக் கருத்துகளைப் பரப்பியவர் என்ற முறையில் அப்படிச் சொல்வதில் தவறில்லை, ஒரு சில குறைகள் இருக்கலாம். ஆனாலும் அவர் புரட்சிக் கவிஞர். அவரது புரட்சிக் கருத்துகளைத் தமிழ் இளைஞர்கள் கற்றறிந்து கடைப்பிடித்தல் வேண்டும்.

தி: நன்றி. வணக்கம்.

வ.சு.: வணக்கம். □

www.tamilarangam.net

நாம் இங்கே இப்போது பகிர்ந்து கொண்டிருக்கும் எழுத்துவடிவம் Column எனப்படுகிறது. இன்றைக்கு வேறு எங்கெல்லாம் இது காணப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது குங்குமம் வார இதழில் கலைஞர் பக்கம் இருப்பது தெரிகிறது. கணையாழியில் ரொம்ப நாளாய் சுஜாதாவின் கடைசிப் பக்கம். ஆக, ஒரு காலத்தில் Column எழுதியவர்களாய் புதுமைப்பித்தன், க. நா. சு. விலிருந்து தற்காலத்தின் ஜெயகாந்தன், அசோகமித்திரன், ஆதவன் வரை எழுதியிருக்கிறார்கள், எழுத ஆசைப்பட்டிருக்கிறார்கள்.

மானாவாரியாகப்போய்க்கொண்டிருக்கும் நவீனவாழ்க்கையில் ஆறுதலை அளிக்கவல்ல நிச்சயத் தங்குமிடமாய் இருப்பது ஜோதிட Column. இலங்கையில் பிரச்சினை தீவிரமடையும் போதெல்லாம் சம்பந்தப்பட்ட அறிவார்ந்தவர்கள் ஜோதிடத்தை நாடுவதைக் கண்ட போது தான் அதன் சக்தி, அதிகாரம் தெரிந்தவனானேன்.

தற்காலத் தன்மையைத் தக்க வைத்துக் கொள்வதாக இருப்பது ஜோதிட எழுத்து. வாரப்பலனில் ஸ்ரீராம ஜன்ம பூமி—பாக்கிஸ்தான்—காஷ்மீர் என்று ஆரம்பித்து, கிரக சஞ்சாரத்தில் நுழைந்து, பெண்களை வீட்டில் அடைத்து வைப்பது எப்படி என்பது வரை போகிறது. உதாரணமாக, காழியூர் வெ. சீத்தாராமய்யர் எழுதிய பிரமோதூத ஒரிஜினல் ஆற்காடு பஞ்சாங்கம் படிக்கவும். ஆஃப்ஸெட் அச்சு. விலை ரூபாய் 11. கூடங்குளத்தில் நடப்பதென்ன என்பது வரை தெரிந்து கொள்ளலாம்.

ஜோதிட எழுத்து இப்படி இங்கே என்றாலும் ஐரோப்பாவில் வேறு மாதிரி. 1964-இல் ரஷ்ய டாங்கிகள் செக்கோஸ்லோவேகியாவில் நுழைந்த பிறகு (அதற்கு இப்போது கோர்ப்பசேவ் கன்னத்தில் தப்பு போட்டுக் கொண்டு தண்டனையாக குட்டிக்கரணம் போட்டாயிற்று) நடந்ததைச் சொல்லலாம். அங்கே பத்திரிகையாளர்களால் கெடுபிடியைத் தாண்டி எழுத முடிந்தது ஜோதிட Column தான். இப்படி எழுதியவர்களில் ஒருவர்மிலான் குண்டேரா என்கிற நாவலாசிரியர். புனை பெயரில் எழுதியதால் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலை. 1974 இலிருந்து பாரீஸ் வாசம். இப்போது சக எழுத்தாளர் வாஸ்லாவ் ஹவேல் ஜனாதிபதியாகி விட்டதால் நாட்டுக்குத் திரும்ப யோசித்துக் கொண்டிருக்கிறார்.

நாமும் யோசிக்க வேண்டியிருக்கிறது. சீத்தாராமய்யர் விஞ்ஞானத்தை ஜீரணித்து ஏப்பம் விடுவதற்குள் நாம் பஞ்சாங்கமொழியில் எழுதியாக வேண்டுமா என்று. இதில் தினமணி நடத்தும் சுடர் கூட சீத்தாராமய்யர் பக்கம் தான். நவகிரகங்களுக்கு அடுத்த பத்தாவது கிரகம் யுரேனஸா, நெப்டியூனா, ப்ளூட்டோவா என்று அது கேட்கிறது. (காண்க: ஜூன் 16 இதழ்). நவகிரகங்களில் ராகுவும் கேதுவும் பொருள் ரீதியான கிரகங்கள் அல்ல, நிகழ்வுகள்தான் (Phenomena) என்கிற விஷயத்தை தினமணி சொல்வதில்லை. இப்படியாக தெரு முனையிலுள்ள கோயிலில் நடக்கின்ற நவக்கிரக பூஜைக்கு நீங்கள் விஞ்ஞானியாக இருந்தாலும தயார் செய்யப்படுகிறீர்கள்.

இதையெல்லாம் எதிர்த்து நண்பர் ஒருவர் கதை எழுதுகிறார்: பெயர் செவ்வாய்தோஷம். செவ்வாய் கிரகத்தை மனிதர்கள் போய் பூமியைப் போல் நாசமாக்க, பிடித்த தோஷத்தில் அது வெடித்துச் சிதறுவதுதான் கதை.

**பிரபல வடிவங்களின் பட்டியலில் யார் யார்?**

Column தவிர தமிழ்க் கலாச்சாரத்தைப் பதிவு செய்யும் பிரபல எழுத்து வடிவங்களைப் பட்டியலிடுவோம்:

## அக்கம் பக்கம் உச்சம் எச்சம்

நாகார்ஜுனன்

www.tamilarangam.net



1. அன்புள்ள அல்லி, அரசு, பராசக்தி, சாவி, தராசு, இந்திரஜித், இத்யாதி கேள்வி-பதில்கள். (ஈழத்தில் சிரித்திரனை நினைவு கொள்க)

2. பிரபலங்களுக்கு எழுதப்படும் கடிதங்கள். இவை பலவிதம். சில அந்தரங்கமானவை. சில கெஞ்சும். நிறைய கடிதங்கள் அட்வைஸ் செய்யும்; சில ஆதங்கப்பட்டுக் கொள்ளும்.

அண்மைக்காலக் கடிதங்களாக ஜெயலலிதாவுக்கு பரீக்ஷா ஞாநி தனது அலை பத்திரிகையில் எழுதிய கடிதமும் பாலம் 1987 மே இதழில் சாதாரணன் கே. பாலச்சந்தருக்கு எழுதிய கடிதமும் லயம் இதழில் தர்மூ அர்ரூப் ச்சீவறாமூ என்கிற பிருமிள் என்கிற பிறேமீள் என்கிற ந(ம்)பர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு எழுதிக் கொண்ட கடிதமும் மறக்க முடியாதவை. இப்படியான கடிதங்களின் இரண்டு தொகுப்புக்களையே (அன்புத் தோழிக்கு, புத்தர் சிரித்தார்) பாமரன் என்பவர் எழுதி விட்டார் என்றால் பார்த்துக் கொள்ளவும்.

3. இதே ரீதியில் போனால் வாசகர் கடிதங்கள், பிரபலங்களுடன் எடுத்துக் கொண்ட ஸ்டூடியோ போட்டோக்கள், பெயர் வருகிற மாதிரி உள்ள நோட்டீஸ் போஸ்டர்கள். (கடைசி சமாச்சாரத்தில் அண்ணனே, புரட்சித்தலைவியே, வீர வேங்கையே, ட்டி ராஜேந்தரே, கே. ஏ. கே—வே என்று வருகின்ற கூப்பிடு ஏகாரங்கள் லேசில் உதாசினப்படுத்த முடியாதவை. அதே போல பிரபலங்கள் எழுதும் கடிதங்களில் உடன்பிறப்பே, அட லேறே, மஸ்தூர் மறவனே, செங்குந்த வீரனே இத்யாதி வரும்)

4. **வாசகர் போட்டிகள் :** கதையின் முடிவு, விமர்சனம், ஆசிரியர் பெயர் இதில் ஒன்றைச் சொன்னால் கோல்டன பீச் மணலில் கையை அளைந்து தங்கச்சாவி தேடச் சொல்வார்கள். அல்லது குலுக்கிப் போட்டுப் பார்ப்பார்கள். கார்டு, கவர், பேப்பர் விலையெல்லாம் எவ்வளவு ஏறினாலும் தமிழர்களுக்கு இதெல்லாம் அலுக்காது என்கலாம்.

5. குமுதம் போல பிரபலங்களால் தயாரித்து வழங்கப்படும் வாராவார இதழ்கள், தயாரிப்பவர்கள் பெண்களாக, அதிலும் இளம் நடிகைகளாக இருக்க வேண்டும். (அர்ச்சனா போல ஊறுகாய் அளவு முற்போக்கு இருந்தால் இன்னும் நல்லது.) இல்லாவிட்டால் நுனிநாக்கு ஆங்கிலம் பேசி பண்டைய இந்தியப் பெருமையைக் காப்பாற்றும் நாட்டியவல்லிகள். அதுவும் இல்லாவிட்டால் பேபி ஷாலினி, கங்கை அமரன் போன்றவர்கள். (இதில் முன்னவர் 50 வயதானவர் போலவும், பின்னர் 13 வயது போலவும் நாடகீயமாக இருப்பது, பேசுவது தமிழ் சினிமாவின் தனிச் சிறப்பு.)

## தலையிலிருந்து காலுக்கு

உலகைக் கோப்பை கால் பந்தாட்டம் பற்றி எழுத extra-time தேவை. அவ்வளவு இருக்கிறது எழுத.

இப்போதைக்கு ஒரே விஷயம் ITALIA 90 என்கிற அச்சில்வரும் உடைந்து சேர்கிற பொம்மை (தலையைக் கால்பந்தாகக் கொண்டுள்ள பொம்மை), ஒரு எந்திர மனிதன். பென்சில் முன்னாலும் டி. வி. திரை முன்னும் கைகட்டி நிற்கும் இந்த மனிதனை டி.வி.யில் பார்த்திருப்பீர்கள். இதை மட்டும் குறித்துக் கொள்ளவும். இவனாக இருப்பது யார்? மீதம் பின்னர். □

---

வானத்தில்
கிரகங்கள் நிலவு நட்சத்திரங்கள்

மண்ணில்
நெல்கதிர்கள் உப்பளம் புளியமரங்கள்
மிளகாய்ச் செடிகள்

எதுவும் தோன்றவில்லை
எனக்கு இன்று இங்கே இப்போது

கவிதைக்குள் மௌனம்
காதலில் சம்மதம்


சூன்யம் கவிந்தபின்னே
சொல் முளைக்குமா ஞானப் பெண்ணே.

**விக்ரமாதித்யன் நம்பி**

வெளியிடுபவர் : இரா. திரவியம், 25 அருணாசலபுரம் மெயின்ரோடு, அடையாறு, சென்னை-20
அச்சிட்டோர் : ஜே. ரமணி, பிளேஸ் பிரிண்டர்ஸ், சென்னை-20

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதிவெண் டி. என். எம். எஸ். (எல்) 371



தோழர். ஹோ–சி–மின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்